...லை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

...கங்கள்: இருபது

...து 12 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 15 வியாழக்கிழமை (01.12.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 347

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## ...ணைக்குழு அறிக்கை ...த்து சபையில் விவாதம் ...ட்டமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

...ண்மைகளைக் கண்டறியும் ஆணைக் ...ின் இறுதி அறிக்கை குறித்து விவாதம் ...ப்பட வேண்டும் என தமிழ்த் தேசிய கூட் ...பு கோரிக்கை விடுத்துள்ளது.

...மிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளு ... உறுப்பினர் மாவை சேனாதிராஜா ...க் கோரிக்கையை விடுத்துள்ளார்.

...ண்மையைக் கண்டறியும் ஆணைக் ...அறிக்கை தொடர்பில் அரசாங்கம் என்ன ...ின்றது என அவர் கேள்வி எழுப்பியுள் ...

...த்துடன் இவ்வருட இறுதிக்குள் நாட்டின் ... பிரச்சினைக்கு அரசாங்கம் உரிய ...னை முன்வைக்கவேண்டும் ...அப்படி அரசாங்கம் தீர்வை முன்வைக் ...தவறினால் தந்தை செல்வா காட்டிய ...யில் போராடுவதைவிட வேறு வழியில்லை ... மாவை சேனாதிராஜா குறிப்பிட்டுள் ...ா.

(பா-11)

# ஆணைக்குழுவின் அறிக்கையை மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும்

## அதன் பரிந்துரைகளை அமுல்படுத்துவதும் அவசியம்; ஜப்பான் விஷேட தூதுவர் அகாஷி வலியுறுத்து




(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையினை தேவை கருதி மக்கள் மத்தியில் பகிரங்கப் படுத்த வேண்டும். அத்துடன் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை இலங்கை அரசு அமுல்படுத்த வேண்டும். இவ்வாறு இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஜப்பானிய விஷேட தூதுவர் யசூசி அகாஷி வலியுறுத்தியுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## ஆறு கல்வி வலயங்களுக்கு ...ல்விப் பணிப்பாளர்கள் நியமனம்

### ...வட மாகாண கல்வி அமைச்சு வழங்கியது

(யாழ்ப்பாணம்)

...வடக்கு மாகாண கல்வி அமைச்சினால், ...ழ்ப்பாணம், கிளிநொச்சி உள்ளிட்ட ஆறு ...வி வலயங்களுக்கு கல்விப் பணிப்பாளர் ...நியமிக்கப்பட்டுள்ளனர்.

...இந்நியமனங்கள் இன்று முதல் அமுலுக்கு ...ம் வகையில் நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வராஜா, யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.

இந்நிலையில் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளராக, (19ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்து சிறைச்சாலைகளிலும் நேற்று தமிழ்க் கைதிகள் அடையாள உண்ணாவிரதம்

(அநுராதபுரம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகள் அதிகாரிகளால் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து இலங்கையின் அனைத்து சிறைகளிலும் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் அடையாள உண்ணா விரதப் போராட்டம் ஒன்றை நேற்று நடத்தினர்.

இதேபோன்ற தாக்குதல் சம்பவங்கள், இதற்கு முன்னரும் கண்டி, போகம்பரை, பதுளை, மட்டக்களப்பு, அநுராதபுரம், யாழ்ப்பாணம் மற்றும் வெலிக்கடை போன்ற சிறைகளில் நடந்திருப்பதாக கூறியுள்ள கைதிகள், இனிமேல் இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் தடுக்க உறுதியான நடவடிக்கைகள் தேவை என்று கூறியே இந்த போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

இதேவேளை அநுராதபுரம் சிறைச்சாலையில் நான்காவது நாளாக போராட்டத்தில் ஈடுபடும் சில கைதிகள் நிலைமை மோசமாக இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே (19ஆம் பக்கம் பார்க்க)

# ...யாழ்ப்பாண பொது நிர்வாகத்தில் ...டையினரின் தலையீடு உள்ளதா?

## ...அமெரிக்கா கேள்வி: அரச அதிபர் மறுப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா நாட்டில் போருக்கு பின்னரான காலப்பகுதியில் இராணுவத்தினரின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா எனவும் பொது நிர்வாகத்தில் இராணுவத்தினரின் தலையீடு உள்ளதா எனவும் அமெரிக்காவின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சிரேஷ்ட அதிகாரி எமிலி பிலேக்னர் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்திற்கு நேற்று முற்பகல் 11.30 மணியளவில் வருகை தந்த அமெரிக்க மற்றும் மாலைதீவுக்கான சிரேஷ்ட அதிகாரி, (20ஆம் பக்கம் பார்க்க)

## வங்களா விரிகுடாவில் தாழமுக்கம் அதிகரிப்பு

(கொழும்பு)

வங்களா விரிகுடாவில் தாழமுக்கம் அதிகரித்துள்ளதால் சில தினங்கள் வடக்குக் கிழக்கில் தொடர்ச்சியாக மழை பெய்யும் என கால நிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

இந் நிலையில் எதிர்வரும் நாட்களில் மழைபெய்யக் கூடும் என்று கால நிலை அவதான நிலையத்தின் கடமை நேர வானியல் நிபுணர் கே.சூரியகுமாரன் குறிப்பிட்டுள்ளார்.

இதன் பிரகாரம் வங்களா விரிகுடா கடலின் தென்கிழக்குப் பகுதியில் இலங்கையிலிருந்து சுமார் 900 கிலோ மீற்றர் தூரத்தில் தாழ் வளிமண்டல அமுக்கத்தில் வானிலை குழப்பம் ஒன்று தோன்றிக் கொண்டிருக்கின்றது.

இதன் காரணத்தினால் வடக்கு, கிழக்கு ஊவா, தெற்கு (19ஆம் பக்கம் பார்க்க)

## பட்ஜெட் இரண்டாம் வாசிப்பு ... மேலதிக வாக்குகளால் நிறைவேறியது

(கொழும்பு)

...012ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத் ...(பட்ஜெட்) இரண்டாம் நிலை வாசிப்பு ...ன வாக்களிப்புகள் 91 மேலதிக வாக்கு ...ல் நிறைவேற்றப்பட்டுள்ளது. பிரேர ...க்கு ஆதரவாக 151 வாக்குகளும் எதிராக ...வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

...ந் நிலையில் 13 நாடாளுமன்ற உறுப்பி ... வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது ...பிலிருந்து வெளியேறினர்.

இதனிடையே வரவு செலவுத்திட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹான் லால் கிறேரோ ஆதரவு வழங்கியதுடன் ஆளும் தரப்பினர் ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.

இந் நிலையில் வரவு செலவுத்திட்டத்தின் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள அமைச்சரவை மாற்றத்தின் போது மொஹான் லால் கிறேரோ பிரதிக்கல்வி அமைச்சராக நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (பூ)

### யுத்த மீறல் குற்றச்சாட்டு

## பாதுகாப்புச் செயலர் ஏற்கிறார்; இராணுவத் தளபதி மறுக்கிறார்

(கொழும்பு)

படையினர் மீது ஐ.நா. நிபுணர்குழு சுமத்திய குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் வகையில், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை அமைந்திருக்கும் என்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சபுகஸ்கந்தவில் உள்ள பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் அதிகாரிகள் கல்லூரியில் பயிற்சி அதிகாரிகள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மனிதாபிமானப் போரின் போது முப்படைகளும் எவ்வாறு (20ஆம் பக்கம் பார்க்க)

...டுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வட மாகாண கல்வி நிர்வாக அதிகாரிகளுக்கு மீள் நியமனம் வழங்குவதை நிறுத்த வேண்டும்

## ஆசிரியர் சங்கங்கள் கூட்டாக வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி நிர்வாகத்தில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களிற்கு ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் வழங்குவதனை நிறுத்துவதுடன் அந்த வெற்றிடங்களுக்கு புதிய அதிகாரிகள் கால தாமதமின்றி மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்படவேண்டும் என வட மாகாண ஆளுநரிடம் ஆசிரியர் சங்கங்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் வட மாகாணஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியை நேற்று சந்தித்து கலந்தரையாடிய போது மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் நேற்று வட மாகாண ஆளுநரை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது வன்னித் தொண்டர் ஆசிரியர்களுக்கான ஆசிரியர் உதவியாளர் நியமனம், ஆசிரியர் வருடாந்த இடமாற்றங்கள், வட மாகாணத்திலுள்ள கல்வித் திணைக்களங்கள் மற்றும் பாடசாலைகளில் உள்ள ஆளணி வெற்றிடங்களை நிரப்புவது, வன்னியில் யுத்தத்தின் போது இறந்த ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது, மாணவர் அனுமதியின் போதும் நிகழ்வுகளின் போதும் பாடசாலைகளில் மாணவர்களிடம் பணம் அறவிடப்படுவது நிறுத்தப்படவேண்டும் போன்ற விடயங்கள் ஆசிரியர் சங்கங்களால் ஆளுநரிடம் எடுத்துரைக்கப்பட்டது.

வட மாகாண கல்வி நிர்வாகத்தில் சேவையாற்றும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் சேவை முடிபுறுத்தப்பட வேண்டுமென்பதுடன் அந்த வெற்றிடங்களுக்கு விரைவாக புதியவர்கள் நியமிக்கப்படவேண்டுமென ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆளுநரிடம் வலியுறுத்தினர்.

மேலும் வடமாகாண கல்வி நிர்வாகத்தில் 22 கணக்காளர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் ஆளுநரிடம் முன்வைக்கப்பட்டது. (பா-6)

## விண்ணப்பம் வழங்குதல் நேற்றுடன் முடிபடைந்தது

திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்தியத்தில் சட்டமாணிக் கற்கைநெறிக்கான விண்ணப்பம் வழங்குதல் நேற்றுடன் முடிபடைந்துள்ளதாக திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார். வட மாகாணத்தைச் சேர்ந்த 811 பேர் இவ் விண்ணப்பங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

## கண்ணீர் அஞ்சலி

**பூதப்பிள்ளை காசிநாதர்** (காசி அண்ணை)

(Director - K.S.N. Engineering (Pvt) Ltd,

முன்னாள் ESP & Co கொள்வனவு முகாமையாளர்)



எமது அன்புக்குரிய

**திரு. பூதப்பிள்ளை காசிநாதர்**

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து மிகுந்த துயரம் அடை கின்றோம்.

அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரி வித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(இ)

வலம்புரி நிர்வாகம்

## கண்ணீர் அஞ்சலி

**பூதப்பிள்ளை காசிநாதர்**

(காசி அண்ணை)



எமது நிறுவனத்தில் பணியாற்றிய

முன்னாள் ஊழியர்

**திரு. பூதப்பிள்ளை காசிநாதர்**

**(காசி அண்ணை)**

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து மிகுந்த துயரடைகின்றோம். அன்னாருக்கு எமது இறுதி அஞ்சலியைத் செலுத்துவதுடன் அவரின் இழப்பால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

ESP & Co நிறுவனத்தினர்

(C-5082)

## மரண அறிவித்தல்

## நல்லையா மகாலிங்கம்



நல்லையா - மகாலிங்கம் (கரைச்சிக் குடியிருப்பு, முல்லைத்தீவு) அவர்கள் 28.11.2011 அன்று அமெரிக்காவில் மினிசோட்டாவில காலமானார்.

அன்னார் திலகேஸ்வரியின் அன்புக் கணவரும், காந்தீபன் (லண்டன்), காஞ்சனா (ஆசிரியை, மு/முள்ளியவளை றோ.க), காந்தரூபன் (அமெரிக்கா), கபிலன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறீதரன், ஜெயந்தனா ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிநயன், அபிராஜ், கருசனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 30.11.2011 இல் அமெரிக்காவில் மினிசோட்டா மாநிலத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம். (சி-50)

தகவல்:

**T.P.: 0019522977970**

குடும்பத்தினர்


## அரிய வாய்ப்பு இன்றே பயன்படுத்துங்கள்

இங்கிலாந்து பல்கலைக்கழகமொன்றில் கல்வி கற்க IELTS தேவையில்லை

A/L, O/L மட்டும் போதுமானது. பட்டப்பின் படிப்பிற்கும் IELTS தேவையில்லை

விவரங்களிற்கு நேரில்

விசா சேதி பகரும் பிரிவு

**திசைகாட்டி பிறைவேற் லிமிட்டட்**

**THISAIKADDI(PVT) LTD**

முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்



37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

T.P. : 021 221 9016, 021 491 4527

E-mail: Thisaikaddi@sltnet.lk

இணையத்தள முகவரி www.thisaikaddi.lk

(யாழ் நகரிலிருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானம் கடந்தவுடன் வலது புறமாக வரும் ஒழுங்கை)

(C-5083)


## கணனி ஊடுருவல் இடம்பெற்றால் முறையிடலாம்

(கொழும்பு)

பொது மக்கள் தமது கணனிகள் ஊடுருவலுக்கு (ஹெக்கிங்)உள்ளாக்கப்பட்டால் dig.cid@police.lk அல்லது dir.cid@police.lk எனும் மின்னஞ்சல் முகவரிகள் மூலம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ய முடியும் என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (பா)


தற்போது விற்பனையில்...

யாழ்.மக்களின் நன்மதிப்பை பெற்ற

**KUBOTA - K-550 Landmaster**

றீக்கொண்டிசன் செய்யப்படாத புத்தம்புதிய



நீங்கள் நாடவேண்டிய இடம்,

எஸ்.பி.என். மோட்டோர்ஸ்

145, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

# இன்று ஒரு தகவல்

## குழந்தைகள்

ஒரு தகப்பன் தனது பிள்ளையைப் பார்த்து, "இதோ பார்... நீ எப்போதும் உன்னைவிட புத்திசாலியான பிள்ளைகளுடன் சிநேகம் வைத்துக் கொள்ள வேண்டும். அதுதான் நல்லது!" என்றார்.

உடனே அந்தப் பையன் "நீங்கள் சொல்வது சரிதான். ஆனால், என்னைவிட மோசமான பையன்களுக்கு ஒரு புத்திசாலி பையன், தேவைதானே. அதுதான் அந்தப் பையனாக நான் இருக்கிறேன்" என்றார்.

எதற்கு சொல்கிறேன் என்றால், இந்தக் காலத்திலே பையன்களிடம் வாயைத் திறந்தால் மீள்வது கஷ்டம்.

சிறிய பிள்ளைகளிடம் இருக்கிற இந்தப் புத்திசாலித்தனத்தை பெற்றோர் தூண்டி விடவேண்டும். அதை மழுங்கடிக்கக் கூடாது.

இளேடிஸ் கார்ட்னர் என்று அமெரிக்காவில் ஒரு குழந்தை உளவியல் நிபுணர் இருந்தார்.

அவர் சொன்னார்; குழந்தைகள் எதிர்த்துப் பேசுவதை ஓரளவுக்கு அனுமதி வழங்குவதுதான் நல்லது.

உங்கள் குழந்தை உங்களை எதிர்த்து ஏதாவது சொன்னால், உட்னே பெற்றோராகிய நீங்கள் "முளைச்சி மூணு இலை விடவில்லை... அதற்குள்ளே உனக்கு இவ்வளவு திமிரா?" என்று கேட்கக்கூடாது.

சிறிய வயதிலேயே பெரியவர்களை எதிர்த்துப் பேச ஆரம்பித்து விட்டால் பின்னர் அந்தக் குழந்தை பிழையான வழியில் போய்விடும் என்று நினைப்பது பிழை.

தந்தைக்குத் தெரியாத ஒரு கணக்கை பிள்ளை சரியாகச் செய்கிறான்.

உடனே அந்தத் தந்தையார் அது தனக்கு அவமானம் என்று நினைக்கக்கூடாது. அதைவிட பெரிய அவமானம் எல்லாவற்றையும் தாங்கிக் கொள்பவருக்கு பிள்ளை செய்ததுதான் பெரிதாகத் தெரிகிறதா?

எமது பிள்ளை நம்மைவிட புத்திசாலியாக இருக்கிறான் என்று நினைத்துப் பெருமைப்பட வேண்டும்.

குழந்தை உங்களை ஏதாவது சொல்ல விரும்பினால் அதை அவதானமாகப் பொறுமையாக கேட்க வேண்டும்.

அதுதான் செய்த ஒரு காரியத்துக்கு அல்லது செய்யப் போகும் ஒரு காரியத்திற்கு என்ன காரணம் சொல்வது என்பதை பரிவோடு கேட்க வேண்டும்.

சிறிய பிள்ளை ஏதோ விளையாட்டுத் தனமாகப் பேசுகிறான் என்று நினைத்துக் கொண்டு வேறு எங்கேயாவது கவனத்தை செலுத்தக்கூடாது.

ஒரு பையன் தெருவில் விளையாடிக் கொண்டிருக்கிறான். அவனது தாயார் அழைக்கிறார்.

"தம்பி இங்கே வா... கடைக்குச் சென்று கோப்பித்தூள் வாங்கிக் கொண்டு வா" என்று கூறுகிறார்.

பையன் விளையாட்டில் ஒரு முக்கிய கட்டத்தில் இருக்கிறான்.

"சிறிது நேரம் பொறுத்துக் கொள்ளுங்கள். போய் வாங்கித் தருகிறேன்" என்றான்.

"இப்போது... கடைக்குப் போய்தான் வரவேண்டும் என்று வற்புறுத்தினால் அந்தக் குழந்தைக்கு ஏமாற்றம், கோபம், வெறுப்பு எல்லாம் வந்துவிடும். இது நல்லதல்ல.

அதனாலே குழந்தைகளுக்கு நியாயமான பேச்சுரிமையை கொடுக்க வேண்டியது அவசியம் என்று குழந்தை உளவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

பிள்ளைகள் ஏதாவது சந்தேகம் கேட்டால் அதற்குப் பதில் தெரியவில்லை என்பதற்காக தந்தை கோபப்படக்கூடாது.

தந்தை பதில் சொல்ல முடியாத கேள்விகள் எவ்வளவோ இருக்கிறது இவ்வுலகிலே!

ஒரு பையன் அவரது தந்தையாரை பார்த்துக் கேட்டான், "அப்பா! ஒரு கல்லைக் கையிலே இருந்து கீழே போட்டால், ஏன் அது தரையிலே விழுகிறது?" என்றான்.

"புவியீர்ப்பு சக்திதான் அதற்குக் காரணம்! கீழே இருக்கிற அந்தச் சக்திதான் கல்லை இழுக்கிறது!" என்றார் தந்தையார்.

"இந்த சக்தி ஏன் மேலே இழுக்கக்கூடாது? எதற்குக் கீழே இழுக்க வேண்டும்" என்றான் பையன்.

தந்தையார் பார்த்தார்; "அவசரமாக வேலை இருக்கிறது, செய்து முடித்துவிட்டு பதில் சொல்கிறேன்" என்று கூறிவிட்டு மெதுவாக நழுவிவிட்டார்.

பிள்ளைகளுக்குள்ளேயே பிரத்தியேகமான ஒரு சந்தேகங்கள் வரும். அதையெல்லாம் சமாளிப்பது கஷ்டம்தான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வர்த்தக நிலையங்கள் 35 இற்கு எதிராக வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

35 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாக யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரி என். சிவசீலன் தெரிவித்துள்ளார்.

காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, விலைப்பட்டியல் வைக்காது பொருட்களை விற்பனை செய்தமை, குளிர்பானங்களில் பொறிக்கப்பட்ட விலைக்கு அதிமாக விற்பனை செய்தமை போன்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் மீது யாழ்.நீதவான் நீதிமன்றம் மற்றும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றிலும் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

இதில் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் 25 வழக்குகளும் யாழ்.நீதவான் நீதிமன்றில் 10 வழக்குகளும் தாக்கல் செய்யப்படவுள்ளன. இதேவேளை, ஊர்காவற்றுறை நீதிமன்றத்திலும் சாவகச்சேரி நீதிமன்றத்திலும் 40 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக மேற்படி குற்றச்சாட்டின் பேரில் அண்மையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (அ-6)

## மாங்குளத்தில் கடை உடைப்பு; பலசரக்கு பொருட்கள் திருட்டு

மாங்குளம் நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றை திருடர்கள் உடைத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பலசரக்குப் பொருட்களை திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக தெரியவருவது, கடை உரிமையாளர் கடையினை பூட்டி விட்டு வீட்டிற்கு சென்றிருந்தவேளை நேற்று முன்தினம் அதிகாலை கடையினை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பலசரக்குப் பொருட்களை திருடிச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பாக மாங்குளம்பொலிஸாரிடம்முறைப்பாடுசெய்யப்பட்டதையடுத்துபொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-15)

## துணுக்காய் கல்விவலயத்தில் பதவி வெற்றிடங்கள் அதிகரிப்பு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தில் பொறுப்பான பதவிகளில் உரியவர்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது. துணுக்காய் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப்பணிப்பாளராக (நிர்வாகம்) கடமையாற்றிய சி.இராஜேஸ்வரன் மற்றும் இதே வலயத்தில் நிர்வாக அலுவலராக கடமையாற்றிய ஒருவரும் என ஓய்வு பெற்று சென்றுள்ளனர்.

ஆயினும் இதுவரை இவ் வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படவில்லை. இதேவேளை இதுவரை காலமும் துணுக்காய் வலயகல்விப் பணிப்பாளர் த.மேகநாதனும் நேற்றுடன் ஓய்வு பெறுகிறார்.

இதனால் துணுக்காய் கல்வி வலயத்தில் முக்கியமான சில பொறுப்புக்களில் கடமையாற்றியவர்கள் இல்லாமையால் முக்கியமான வேலைகள் முடங்கிப்போயுள்ளன. தற்போது க.பொ.த.சாதாரணதர பரீட்சை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு மேற்குறித்த வெற்றிடங்களை நிரப்பி கல்வி செயற்பாட்டிற்கு உதவவேண்டுமென சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-15)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 65 | 90 | 70 |
| பச்சைமிளகாய் | 240 | 250 | 330 |
| தக்காளி | 110 | 160 | 100 |
| மரவள்ளிக் கிழங்கு | 20 | 30 | 30 |
| கோவா | 50 | 80 | 50 |
| கரட் | 80 | 120 | 70 |
| பூசணி | 60 | 70 | 60 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 35 | 40 | 30 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 60 | 100 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 | 70 |
| பாகற்காய் | 100 | 80 | 90 |
| வெண்டிக்காய் | 20 | 30 | 30 |
| கருணைக் கிழங்கு | -- | 60 | 50 |
| பயற்றங்காய் | 100 | 100 | 100 |
| லீக்ஸ் | 40 | 80 | 40 |
| பீற்றூட் | -- | 60 | 50 |
| கறிமிளகாய் | -- | 130 | 130 |
| முருங்கைக்காய் | 100 | 90 | 100 |
| போஞ்சி | -- | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 40 |
| கீரை - 1 பிடி | 12 | 30 | 20 |
| தேசிக்காய் | 140 | 150 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 25 | 25 |

## இராசி பலன்

*01.12.2011*
*(கார்த்திகை 15, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு*
*சஷ்டி காலை 6.16 மணிவரை*
*அவிட்டம் பின்னிரவு 2.01 மணிவரை*
*இராகுகாலம் 1.44-3.14 மணிவரை*
*சுபநேரம் 7.44-9.14 மணிவரை*
*உலக எயிட்ஸ் தினம்.*

**மேடம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும், எடுத்த கருமங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**இடபம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள், மனையில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுவீர்கள்.

**மிதுனம்** உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பார்கள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, தந்தை வழி உறவினர்கள் மூலம் நல்ல செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும், பிரயாணங்களில் விழிப்புணர்ச்சி தேவை, உடல் நலனில் கவனமெடுக்க வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**சிங்கம்** சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், தொலைபேசித் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், புதிய நபர்களின் அறிமுகம் கிட்டும், பொருளாதார நிலை திருப்தி தரும்.

**கன்னி** கூட்டுமுயற்சி வெற்றியளிக்கும், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரும், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.

**துலாம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறலாம், வியாபார விருத்தியுண்டு, சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியை கொடுக்கும், பிள்ளைகளால் மகிழ்ச்சியுண்டு.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும், பயணங்களால் பலனுண்டு, தாய் வழி உறவினர்களால் நன்மையுண்டு, எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும், வாகன சுகமுண்டு.

**தனுசு** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உடன்பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறலாம், பொருளாதார நிலை உயர்வடையும்.

**மகரம்** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும், தொழில் முன்னேற்றத்திற்காக அதிகம் பாடுபடுவீர்கள், காணாமற் போன பொருளொன்று கைக்கு கிடைக்கலாம்.

**கும்பம்** விருப்பங்கள் நிறைவேற விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை வைக்க வேண்டிய நாள், உறவினர் வருகையால் திடீர் விரயங்கள் ஏற்படலாம், அதிகம் கற்பனைகளை வளர்ப்பீர்கள்.

**மீனம்** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், தூரதேசச் செய்திகளால் ஆச்சரியப்படுவீர்கள், தொழிலில் சிறுமாற்றங்கள் ஏற்படலாம், பிரயாண அலைச்சல்கள் இடம்பெறலாம்.

வளவன்

## நிர்வாகசபை தெரிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் சாவகச்சேரி இந்து விளையாட்டுக்கழகம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.இதன் போது நடப்பாண்டுக்கான நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டது.

விளையாட்டுக்கழக தலைவராக அ.கைலாசபிள்ளை, உபதலைவராக ந.பாலச்சந்திரனும் , செயலாளராக த.இரகுலேசனும்,உபசெயலாளராக த.மஞ்சுரனும், பொருளாளராக கு.சதாசிவமூர்த்தியும், உபபொருளாளராக து.றஜித்குமாரும், பன்னிரண்டு நிர்வாகக்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என பழைய மாணவர் சங்கம் அறிவித்துள்ளது. (அ-29)

## விழிப்புணர்வு கருத்தரங்கு

எச்.ஐ.வி/ எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வும் கருத்தரங்கும் பயிற்சிப் பட்டறையும் இன்று வியாழக்கிழமை, நாளை வெள்ளிக்கிழமை ஆகிய இருதினங்கள் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இதன் முதலாம் நாள் நிகழ்வுகள் பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். பிரந்திய சுகாதார சேவைகள் பணிமனை கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக டாக்டர் எ.கேதீஸ்வரன் ,செயலாக்குநராக நம்பிக்கை நிறுவன (கோப் பவுண்டேசன்) இயக்நனர் டாக்டர் அசோக்குமார் கலந்து நோய் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தவுள்ளனர்.

இரண்டாம் நாள் வெள்ளிக்கிழமை முழு நாள் பயிற்சிப் பட்டறை நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுகளினை சுகவாழ்வுக்கான பயணம் நிறுவணம் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து நடத்துகின்றது.

இதன்மூலம் எமது பிரதேசத்தில் எச்.ஐ.வி/எயிட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே இந்நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டதாகும் என சுகவாழ்வுக்கான பயண நிறுவன நிர்வாகப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (அ)

## அனுமதி அட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக்கல்லூரியின் இம்மாதம் நடைபெறவுள்ள க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு வழங்கப்படவுள்ளன.

பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டை உடனோ அல்லாதவர்கள் அஞ்சல் அட்டையுடனோ வருகை தருமாறு கல்லூரி அதிபர் வி.கணேசராசா கேட்டுக்கொண்டுள்ளார். (அ)

## கலைவிழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறார்களின் கலைவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிலையத்தலைவர் ச.ஏகாம்பரநாதன் தலைமையில் நிலைய றமணன் அரங்கில் இடம்பெறவுள்ளது.

இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக உரும்பிராய் மக்கள் வங்கி முகாமையாளர் க.விஜயகுமார் மற்றும் சிறப்பு விருந்தினராக யா/உரும்பிராய் இந்துக்கல்லூரியின் உபஅதிபர் திருமதி கமலவேணி விஜயகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறும். (அ-9)

# 145 மில்லியன் ரூபா செலவில் சந்தை கட்டடம் நிர்மாணிப்பு



(கரவெட்டி)

என்றிப் நிறுவனத்தினதும் நிக்கொட் நிறுவனத்தினதும் நிதியுதவியுடன் பருத்தித்துறை நவீன சந்தைக் கட்டடம் 145 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இருமாடி கொண்ட இந் நவீன சந்தைக் கட்டட நிர்மாண வேலைகள் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது.இந்நவீன சந்தையானது எதிர்வரும் தைமாதமளவில் திறந்து வைக்கப்பட்டு அதன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ-3-24)

# பொலிகண்டி வீடொன்றில் தங்க நகைகள் கொள்ளை

(கரவெட்டி)

வடமராட்சி பொலிகண்டி பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, வீட்டில் உள்ளவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவேளை வீட்டின் கூரையைப்பிரித்து உள்நுழைந்த கொள்ளையர்கள் 4 இலட்சத்து 23 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் மற்றும் 5 ஆயிரம் ரூபா பணத்தையும் சில வீட்டு உபகரணங்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு முறைப்பாடு செய்ததை அடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-24)

# வடமராட்சி பிரதேசத்தில் இளவயது கர்ப்பம் அதிகரிப்பு

(கரவெட்டி)

வடம்ராட்சி பிரதேசத்தில் இவ்வாண்டு ஜனவரிமாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரை வைத்தியசாலைகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் புள்ளி விபரங்களின் படி இளவயதுக்கர்ப்பம் 56, திருமணத்திற்கு முன்னதான கர்ப்பம் 15, சிறுவர் துஷ்பிரயோகம் 13ஆகியன பதிவாகியுள்ளன.

இதில் கரவெட்டியில் இள வயதுக் கர்ப்பம் 22, திருமணத்திற்கு முன்னதான கர்ப்பம்3, சிறுவர் துஷ்பிரயோகம்4,என பதிவாகியுள்ளன.

பருத்தித்துறை பிரதேசத்தில் இளவயதுக்கர்ப்பம் 34, திருமணத்திற்கு முன்பாக கர்ப்பம் 12,சிறுவர் துஷ்பிரயோகம் 3 எனவும் மருதங்கேணி பிரதேசத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் 6 என்பன பதிவாகியுள்ளன.

இவ்வாண்டு கடந்த 10 மாதங்களுக்கு அதிகளவான சம்பவங்கள் வடமராட்சி பிரதேசத்தில் கடந்த ஆண்டை விட அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (அ-3-24)

# சாவ.சமுதாய சீர்திருத்த பிரிவு இன்று அங்குரார்ப்பணம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் சமுதாய சீர்திருத்த பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன் உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் இன்று வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதனால் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் சமுதாய சீர்திருத்தப்பிரிவு உதயமாவதன் மூலம் நீதிமன்றினால் சிறுகுற்றங்களுக்காக தண்டம் விதிக்கப்பட்டு தண்டப்பணம் செலுத்த பணபலம் அற்றவர்கள் தாங்கள் தாங்கள் தண்டப் பணத்திற்கு சமமான உடல் ரீதியான உழைப்பினை வழங்குவதன் மூலம் விடுதலையாவர்.

இதன்மூலம் தண்டப்பணம் விதிக்கப்பட்டவர்கள் சிறைச்சாலை செல்வது தடுக்கப்படுகின்றமை ஓர் சிறப்பம்சம் ஆகும்.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசாவின் முயற்சியினால் இப்பிரிவு வடமாகாணத்தில் முதல்முறையாக சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.சாவகச்சேரி நீதிமன்றத்தில் முதல் முறையாக சட்ட உதவி ஆணைக்குழு மற்றும் சமுதாய சீர்திருத்தப்பிரிவு ஆகியன இவரின் முயற்சியாலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)




# விபத்து சம்பவத்தில் மாணவன் படுகாயம்

(தெல்லிப்பழை)

பாடசாலைக்கு செல்லும் வழியில் மாணவன் மீது மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் மாணவனின் கால்கள் முறிவடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் தெல்லிப்பழையில் காலை 7.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இதில் அப்பகுதியைச் சேர்ந்த ரமேஷ் துஷாந்த் (வயது-9) என்ற மாணவனின் கால்களே முறிவடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, குறித்த மாணவன் நேற்றுக் காலை வீதியால் நடந்து சென்று கொண்டிருக்கும் போது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே இந்த விபத்து ஏற்பட்டது.

வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பர் வாகனத்தினை கடந்து சென்ற போதே இந்த எதிர்பாராத விபத்து ஏற்பட்டது.இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-6)

## ஆன்மீக நிகழ்வுகள்

(மருதங்கேணி)

தொண்டைமாணாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வெள்ளிக்கிழமை தோறும் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்றது வருகின்றன.

இதில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு காரைநகர் கிழவன்காடு கலாமன்ற பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வு இடம்பெறவுள்ளது. (அ-35)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையில் நடத்தப்படும் ஜே/69 கிராம சேவையாளர் பிரிவு.மக்கள் பங்கேற்புடனான கிராம அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஜே/ 69 குருநகர் சனசமூக நிலைய கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இக்கூட்டத்தில் பங்குபற்றி தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஒத்துழைப்பினை வழங்குமாறுயாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அறிவித்துள்ளார். (அ)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அரசசேவை பட்டதாரி அலுவலர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார திணைக்கள கலந்துரையாடல் மண்டபத்தில் சங்கத் தலைவர் க.கஜீதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் அனைத்து உத்தியோகத்தர்களையும் கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் கே.எஸ்.மயூரன் அறிவித்துள்ளார். (அ)

## அறிவுறுத்தற் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் இடம்பெறவுள்ள க.பொ.த. (சா/த) பரீட்சையில் கடமையாற்றும் பரீட்சை அலுவலர்களுக்கான அறிவுறுத்தற் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு கோப்பாய் கோட்டம் தவிர்ந்த யாழ்ப்பாண வலயம், தென்மராட்சி மற்றும் தீவக வலயத்தைச் சேர்ந்த இணைப்பு நிலைய அலுவலர்கள், உதவி இணைப்பு நிலைய அலுவலர்கள், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்கள் ஆகியோரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

## ஞானச்சுடரின் வாசகர் போட்டி

(மருதங்கேணி)

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வருடந்தோறும் நடத்தப்பட்டு வரும் ஞானச்சுடர் வாசகர்களுக்கான போட்டியானது இவ்வருடமும் நடைபெறுகின்றது.

இவ்வருடத்தின் தைமாதம் முதல் ஐப்பசி மாதம் வரையிலான ஞானச்சுடர் இதழ்களில் இருந்தே கேள்விகள் எடுக்கப்பட்டுள்ளன.கார்த்திகை மாத இதழில் அக்கேள்விகள், விதிமுறைகள் மற்றும் தேவையான விபரங்களைப் பெறமுடியும் என்பதோடு போட்டியில் எவரும் பங்குபெற்றலாம் என தெரிவிக்கப்படுகின்றது. (அ-35)

# பாக். ஜனாதிபதியுடன் இலங்கை படைத்துறை அதிகாரிகள் பேச்சு

பாகிஸ்தானுக்கு விஜயம் செய்துள்ள இலங்கை கூட்டுப்படைகளின் தளபதி எயார்சீவ் மார்சல் ரொஷான் குணதிலக தலைமையிலான உயர்மட்ட படைத்துறை அதிகாரிகள் குழு அந்நாட்டின் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி மற்றும் படைத்துறை உயரதிகாரிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியை நேற்று முன்தினம் இஸ்லாமாபாத்தில் இக்குழுவினர் சந்தித்த போது இலங்கையுடனான உறவுகளை பாகிஸ்தான் பெரிதும் மதிப்பதாக அவர் கூறியுள்ளார்.

தென்னாசியப் பிராந்தியத்தின் அமைதி, பாதுகாப்பு மற்றும் உறுதித்தன்மை ஆகியவற்றை உறுதியாகப் பேணுவதற்கு இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான படைத்துறை உறவுகள் தொடர்பாக திருப்தி வெளியிட்ட பாகிஸ்தான் ஜனாதிபதி இலங்கை முக்கியமானதொரு இடத்தில் அமைந்திருப்பதால் வலுவான உறவைப் பேண வேண்டிய அவசியம் குறித்தும் இக் குழுவினருக்கு கூறியுள்ளார்.

இச்சந்திப்பின் போது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின்போது இலங்கை படைத்தரப்பினருக்கு பாகிஸ்தான் வழங்கிய ஆயுத உதவிகளுக்கு இலங்கை கூட்டுப்படைகளின் தளபதி எயார்சீவ் மார்சல் ரொஷான் குணதிலக நன்றி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கான இலங்கை தூதுவர் எயார் சீவ் மார்சல் ஜெயலத் வீரக்கொடி மற்றும் இலங்கை படைத்தரப்பைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் ஜனக வல்கம மற்றும் விமானப் படை அதிகாரி குறூப் கப்டன் ஜனக நாணயக்கார ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

அதேவேளை, பாகிஸ்தானின் கூட்டுப்படைத் தலைமை அதிகாரிகள் குழுவின் தலைவர் ஜெனரல் காலித் சமீம் வைனையும் இவர்கள் நேற்று முன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இதன்போது இலங்கை படைத்தரப்பினருக்கு பல்வேறு வழிகளின் மூலம் வழங்கப்படும் பாகிஸ்தானின் உதவிகளுக்கு எயார் சீவ் மார்சல் ரொஷான் குணதிலக நன்றி கூறியுள்ளார். இதன்போது எயார்சீவ் மார்சலுக்கு பாகிஸ்தான் படைத்தரப்பினரின் அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது.

இலங்கையின் படைத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில் கூட்டுப் படைகளின் தளபதி தலைமையிலான இலங்கையின் உயர்மட்ட படைத்துறை அதிகாரிகள் குழு பாகிஸ்தானுக்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## எயிட்ஸ் விழிப்புணர்வு தினம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைப் பிரிவினரால் எயிட்ஸ் விழிப்புணர்வு தினம் எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை பருத்தித்துறை மணியகாரன் சந்தி ஐ.எம்.ஆர். சி. இல்லத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பருத்தித்துறைப் பிரிவுத் தலைவர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக நீர் சுகாதார மேம்படுத்தல் வதிவிடப் பிரதி நிதி (ஐ.எப்.ஆர்.சி.), றேபேக்கா கவுறா, சிறப்பு விருந்தினர்களாக எஸ். எல்.ஆர். சி.எஸ். யாழ். கிளை கே. பாலகிருஸ்ணன், வைத்திய கலாநிதி வி.ஜெயராஜ், என்.சிவபாலன், என்.வரதராஜசர்மாவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

## சீரற்ற காலநிலையால் பாதிப்புற்றோருக்கு பன்னிரண்டு மில்லியன் ரூபா நிதியுதவி

(கொழும்பு)

நாட்டில் கடந்த ஒருவார காலப்பகுதியில் நிலவிய சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசர நிவாரண தேவைக்காக 12 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் கொடிபிலிப்பு தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களின் உடனடி தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காகவும் உணவு உள்ளிட்ட ஏனைய தேவைக்காகவும் இந்த நிதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நிவாரண பொருட்கள் அனைத்தும் அந்தந்த பிரதேச செயலகங்களினூடாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## ஈராக் தூதுவர் ஏறாவூருக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கான ஈராக் தூதுவர் கதான் தாஹா கலாப் உள்ளிட்ட பிரதிநிதிகள் நேற்று மட்டக்களப்பு ஏறாவூர் சதாம் ஹுசைன் மாதிரிக் கிராமத்துக்கு விஜயம் செய்துள்ளனர்.

இதன் போது சதாம் ஹுசைன் மாதிரி கிராமத்திலுள்ள பள்ளிவாசல் மற்றும் குடியிருப்புக்களை அவர்கள் பார்வையிட்டனர்.

1978 அம் ஆண்டு வீசிய சூறாவளியினால் வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு என 100 வீடுகள் உள்ளடக்கி சதாம் ஹுசைன் மாதிரிக் கிராமம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இங்கு அமைந்துள்ள் வீடுகள் மற்றும் ஆதரவற்றோர் இல்லம் என்பனவற்றை புனரமைக்க செய்வதற்கென 25 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என ஈராக்கிய தூதுவர் அறிவித்துள்ளார்.

சதாம் ஹுசைன் மாதிரிக் கிராமம் எனும் பெயரில் மாற்றம் செய்வது தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டதாக குறிப்பிட்டார். (அ-2)


KALAIMAGAL INTERNATIONAL COLLEGE
NOTHING IS IMPOSSIBLE

# KALAIMAGAL International College

**இலங்கை கல்வித்துறையில் சிறந்த பெறுபேறுகளை ஈட்டிக்கொள்ளும் மாணவர்கள் செறிந்து வாழும் வட பகுதியில் சர்வதேச மொழியான ஆங்கிலத்தின் புலமை சுமார் 25 வருடங்களாகத் தொலைக்கப்பட்ட அல்லது அக்கறை கொள்ளாத ஒன்றாகவே காணப்படுகின்றது.**



இன்றைய உலகமயமாக்கலில் ஆங்கில அறிவு மிக மிக இன்றியமையாததாகக் காணப்படுவதனால் ஆங்கில மொழி மூலக் கல்வியின் அவசியம் காலத்தின் கட்டாயமாகும். இதனைக் கருத்திற்கொண்டு எமது கல்லூரி வட பகுதியில் ஆங்கிலமொழி மூலக் கல்வியை உள்வாங்கும் பொருட்டு பல இடங்களில் தனது கிளைகளை நிறுவியுள்ளது. எமது கலைமகள் சர்வதேச கல்லூரியின் சிறப்பான செயற்றிட்டங்கள் வருமாறு:

- பாலர் வகுப்பு முதல் க.பொ.த. (உ/த) வரை கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை கல்வித் திணைக்களத்திலும் பரீட்சைத் திணைக்களத்திலும் உரிய முறையில் பதிவு செய்யப்பட்ட முழுநேர தனியார் பாடசாலை ( English Medium )
- சிறந்த ஆங்கில மொழி மூலம் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்.
- சர்வதேச தரம் வாயந்த வகுபபறை வடிவமைபபு
- பிரத்தியேக சீருடை
- சாதாரண மக்கள் முகம்கொடுக்கக்கூடிய மிகக் குறைந்த அளவு கட்டண வசதி
- தமிழ், சமயம் ஆகிய பாடங்கள் தமிழ்மொழி மூலமும் ஏனைய அனைத்துப் பாடங்களும் ஆங்கில மொழிமூலம் சிங்களம் விருப்பத்துக்குரிய பாடமாகவும் கற்பிக்கும் கல்விக் கொள்கை.
- அரச பாடசாலைகளின் நேரசூசி அமைப்பு.
- விளையாட்டு, கலை, கலாசாரம் நிகழ்வுகளை கல்விசார் செயற்பாடுகளாக உள்வாங்கும் கல்விக்கொள்கை.
- மாணவர்களை உற்சாகப்படுத்தும் வருடாந்த பரிசளிப்பும், கலைவிழாக்களும்.


**மேற்குறிப்பிட்ட சிறந்த செயற்பாடுகளுடன் இயங்கும் எமது கல்லூரியின் 2012 ஆம் ஆண்டுக்கான அனைத்து வகுப்புகளுக்குமான விண்ணப்பங்கள் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.**

*மேலதிக விபரங்களுக்கு எமது தலைமைக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்:*

**KALAIMAGAL International College**
CHURCH LANE, KOKUVIL EAST, KOKUVIL.
T.P.:021 4923235, 0778834592, 0774904286, 0776548283

KALAIMAGAL INTERNATIONAL COLLEGE
NOTHING IS IMPOSSIBLE

(அ-5077)





வவுனியா விபுலானந்தாக் கல்லூரியின் பெற்றோர் தின விழா அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது கல்லூரி அதிபர் வே. இந்திரன் உட்பட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் கலை நிகழ்ச்சியினையும் படங்களிற் காணலாம்.

# அநியாயங்களை தட்டிக்கேட்கவே மக்கள் இப்போது கூடியுள்ளனர்

## எதிர்ப்புப் போராட்டத்தில் எம்.பிக்கள்

(கொழும்பு)

சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் விடுதலையை வலியுறுத்தி ஐக்கிய தேசியக் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணி கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்றது.

இந்த தேசிய எதிர்ப்பு தினத்தில் கலந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தெரிவிக்கையில்,

அரசாங்கம் செய்யும் பல அநியாயங்களை தட்டிக்கேட்பதற்காகவே மக்கள் இன்று இங்கு கூடியுள்ளனர். சாதாரண மக்களின் பிரச்சினைகளை உணராது எந்தவித வாய்ப்புக்களையும் சாதாரண மக்களுக்கு வழங்காது இன்று தனிநபரொருவரின் வருமானம் 2 ஆயிரத்து 800 டொலரென கூறுகின்றனர். ஒரு தனிநபருக்காவது 3 இலட்சம் வருமானம் இருக்கின்றதாவென்று பார்த்தால் நூற்றுக்கு பத்து சதவீதமானவர்களுக்கு கூட இது இல்லாதநிலைமை காணப்படுகின்றது என்றார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் செயலாளர் குமரகுருபரன் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கம் இன்று பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது. ஒன்று தென்னிலங்கையிலுள்ள பிரச்சினை. மற்றையது தமிழ் மக்களுடைய தேசிய பிரச்சினை ஆகியவற்றையே இந்த அரசாங்கம் எதிர்நோக்கியுள்ளது. தென்னிலங்கையிலுள்ளபிரச்சினை பொங்கி வழிந்தன் காரணமாகவே இன்று இந்தக் கூட்டம் நடைபெறுவதற்கு மூலகாரணமாக அமைந்துள்ளது.

தென்னிலங்கையில் விலைவாசிகள் அதிகரித்துள்ளன. தமிழ் மக்களைப் பாதித்த பயங்கரவாதத் தடைச்சட்டமும் அவசரகாலச் சட்டமும் சிங்கள மக்களையும் பாதிப்பிற்குள்ளாக்கியுள்ளது.

இருப்பினும் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை இதனுடன் இணைத்துக்கொள்ள வேண்டுமென்ற நோக்கிலேயே ஜனநாயக மக்கள் முன்னணி இந்த எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளது.

தேசிய இனப்பிரச்சினை மிக விரைவாக தீர்க்கப்பட வேண்டும். சிறையிலுள்ள குற்றஞ்சாட்டப்படாத தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் ஆகிய வேண்டுகோள்களை நாங்கள் இதில் முன்வைக்கின்றோம்.

தேசிய இனப்பிரச்சினை மிக விரைவாக தீர்க்கப்படவேண்டும். அந்த வகையில் இதற்கான அடித்தளங்கள் ஏற்கனவே இடப்பட்டுள்ளன என்றார். (அ-2)

# எமது பிரச்சினைகளை வெளிநாடுகளில் முறையிடுவது வெட்கக்கேடான விடயம்

## பிரதமர் ஜயரட்ண தெரிவிப்பு

இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களின் விலைகள் மிகக் கூடுதலாக அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் பாணின் விலை மக்கள் வாங்க முடியாத அளவுக்கு உயர வேண்டும் என்றும் பிரதமர் தி.மு.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வரவு செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,எமது நாட்டில் இடம்பெறும் சிறு பிரச்சினைகளைக்கூட பொது நலவாய அமையத்திடமும் சர்வ தேச நாடுகளிடமும் முறையிடுவது வெட்கக்கேடானது.

எமது நாட்டில் இடம்பெறும் சிறு பிரச்சினையைக்கூட எதிர்க்கட்சியினர் சர்வதேசத்திடமும் பொதுநலவாய நாடுகளிடமும் முறையிடுவதற்கு முயற்சிக்கின்றனர். இது வெட்கக்கேடான விடயமாகும். வீட்டுக்குள் இருக்கும் நெருப்பை வெளியில் கொண்டு செல்வது ஆபத்தானது என்ற முதுமொழி இருக்கின்றது.

சிறு பிரச்சினைகள் தொடர்பில் வெளிநாடுகளிடம் முறையிடும் போது நாம் கட்டிக் காக்கும் நாட்டின் கௌரவம், மக்களின் கௌரவம் பறிக்கப்படுகின்றது என்பதனால் எதற்கெடுத்தாலும் சர்வதேசத்திடம் செல்வதனை எதிர்க்கட்சியினர் நிறுத்த வேண்டும்.

நடுத்தர வருமானம் பெறுகின்ற நாடாக எமது நாடு தற்போது முன்னேறியுள்ளது. துரிதமான பொருளாதார வளர்ச்சியை நோக்கி நாம் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். உலக வங்கியும் இதனையே கூறுகின்றது.

மக்களை என்றென்னும் கையேந்தும் நிலையில் வைத்திருக்க முடியாது. நிவாரணமும் வழங்க முடியாது. இந்த வரவு செலவுத் திட்டத்திடம் நூற்றுக்கு நூறு வீதம் மகிழ்ச்சியளிக்க கூடிய வகையில் இல்லை என்றாலும் இதுவரையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டங்களை விட இதுவே சிறந்த வரவு செலவுத்திட்டமாகும்.

நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைய வேண்டும். இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீதான விலை இன்னும் இன்னும் அதிகரிக்கப்படவேண்டும். பாணின் விலை இன்னும் இன்னும் அதிகரிக்கப்பட வேண்டும்.மக்கள் வாங்க முடியாத அளவுக்கு அதிகரிக்கப்பட வேண்டும். அப்போதுதான் உள்ளூர் உற்பத்திகள் அதிகரிக்கும் என்றார். (அ-2)

# இலங்கையரென்ற உண்மையை மறைத்த குடும்பத்தவர்களுக்கு ஒன்பது வருட சிறை

## மதுரை நீதிமன்றம் தீர்ப்பு

தாங்கள் இலங்கைப் பிரஜைகள் என்ற உண்மையை மறைத்து இந்தியர்களெனத் தெரிவித்து இந்தியாவில் சொத்துக்களை வாங்கிய குற்றச்சாட்டில் மதுரை காமராஜர் பல்கலைக்கழக கல்லூரியின் தற்காலிக விரிவுரையாளருக்கும் அவரின் பெற்றோருக்கும் மதுரை நகர நீதிமன்றம் 9 வருட சிறைத்தண்டனை விதித்துள்ளது.

அத்துடன் அவர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டிருப்பதாக ரைம்ஸ் ஒவ் இந்தியா பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

ஜேக்கப் சவரிமுத்துவும் அவரின் மனைவி மேரி அக்னேஸும் பெல்ஜியத்திலிருந்து 15 வருடங்களுக்கு முன்னர் இந்தியாவுக்கு வந்துள்ளனர். பெல்ஜியத்தில் அவர்கள் இலங்கை அகதிகளாக இருந்துள்ளனர் என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

அகதி முகாமில் இருப்பதற்குப் பதிலாக மதுரையில் வாடகை வீட்டில் அவர்கள் தங்கியிருந்தனர்.

மகனை மதுரைப் பாடசாலைக்கு மாற்றியபோது தங்களை இந்தியப் பிரஜைகள் என்று தெரிவித்திருந்ததாக் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ரொகானின் மனைவியான மேரி பிரவீணாவை துன்புறுத்தியதாக செய்யப்பட்ட புகாரில் 2008 மேயில் ரொகானும் அவரின் பெற்றோரும் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் இந்தியப்பிரஜையெனக் கூறி அரசாங்கத்தை ஏமாற்றி அவர் சொத்துகளை வாங்கியிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

# ரணிலிற்கு போட்டியாக கரு அல்லது சஜித்தை களமிறக்க தீர்மானம்

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய உத்தியோகத்தர் நியமனம் இம் மாதம் நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு கட்சி யாப்பில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைய ஒவ்வொரு ஆண்டிலும் புதிய உத்தியோகத்தர் நியமனம் மேற்கொள்ளப்படும் என கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் செயற்குழுவினால் வருடாந்தம் பதிய உத்தியோகத்தர்களை நியமிக்கும் பணி மேற் காள்ளப்படும்.

இதேவேளை கட்சியின் தலைமைப் பதவிக்காக இம்முறையும் போட்டியிடப் போவதாக கட்சியின் தற்போதைய தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவிற்கு போட்டியாக கரு ஜயசூரிய அல்லது சஜித் பிரேமதாஸவை களமிறக்க கிளர்ச்சி குழு உறுப்பினர்கள் தீவிர முனைப்பு காட்டி வருவதாக கட்சி வட்டாரங்கள் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)


# சேவை நலன் பாராட்டு



(சீ-5079)

மு/வித்தியானந்தக் கல்லூரியில் ஆய்வு கூட
உதவியாளராக அர்ப்பணிப்புடன் சேவையாற்றி
02.12.2011 முதல் பணியிலிருந்து ஓய்வு பெறும்

**திரு.அ. துரைராசசிங்கம்(துரை அண்ணை)**

அவர்களது சேவையை அகமகிழ்ந்து
வாழ்த்துகின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
மு/வித்தியானந்தக் கல்லூரி,
முள்ளியவளை.

# கேள்விப்பத்திரம் கோரல்

## ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை

சிற்றுண்டிச்சாலையும் துவிச்சக்கர மற்றும் வண்டிகள் பாதுகாப்பு நிலையமும் 2012 ஆம் ஆண்டுக்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பப்படிவங்கள் மீளளிப்புச் செய்யப்படாத ரூபா 500/- செலுத்தி ஆதார வைத்தியசாலையில் பெருளாளரிடம் 01.12.2011 முதல் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி-15.12.2011 மாலை 3.00 மணிவரை

ஆதாரவைத்தியசாலை,
பருத்தித்துறை.

(சி/5078)

Dr.V. ஜெயராஜா, தலைவர்,
அபிவிருத்தி குழு.

## டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் இந்த மாதத்திற்குள் மாத்திரம் 180 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கடந்த மாதத்தில் 150 டெங்கு நோயாளர்கள் பதிவாகியிருந்ததாக கொழும்பு மாநகரசபையின் பிரதம பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி பிரதீப் காரியவசம் தெரிவிக்கின்றார்.

இதனடிப்படையில் இம்மாதம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சகல ,பாடசாலை அதிபர்களுக்கும் டெங்கு நுளம்புகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்துவது தொடர்பில் விதிமுறைகள் அடங்கிய கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதம பொதுச்சுகாதார வைத் திய அதிகாரி மேலும் குறிப்பிட்டார். (அ-2)

## சபாநாயகர் பொதுநலவாய கொள்கைக்கு முரணாகச் செயற்பட்டு வருகின்றார்

### கழுத்துப் பட்டியை கழற்றியமை குறித்து ரணில்

(கொழும்பு)

நாட்டின் நிலைமைகளைத் தெளிவுபடுத்துவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் ஒருவருக்குள்ள உரிமை முதல் தடவையாக பறிக்கப்பட்டுள்ளது. இது அபாயக் கட்டத்தின் ஓர் அறிகுறியாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமாகிய ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்துக்குக் கட்டுப்பட்டுள்ளது. அத்தோடு நாம் அச்சங்கத்தில் உறுப்பினர்கள். எனவே அதன் கொள்கைகளுக்கு கட்டுப்படுத்துவதுடன் அதனை நடைமுறைப்படுத்தவும் வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுநலவாய இலட்சினை பொறித்த கழுத்துப் பட்டியினைக் கழற்றிவிட்டு பாராளுமன்றத்தை விட்டு வெளியேறியமை தொடர்பில் விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடொன்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது. அதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

2012ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ளது. அதன் தலைவராக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ உள்ளார். ஆனால் அவர் பொதுநலவாய கொள்கைக்கு முரணாக செயற்படுவதுடன் அதை நடைமுறைப்படுத்த தவறியுள்ளார்.

எனவே பாராளுமன்றத்தில் பொதுநலவாய இலச்சினை பொறித்த கழுத்து பட்டியை கட்டியிருப்பதில் அர்த்தம் இல்லை என்பதற்காகவே அதை நான் கழற்றி விட்டு பாராளுமன்றத்திலிருந்து வெளியேறினேன்.

நாட்டின் நிலைமைகளை தெளிவு படுத்துவதற்கான சகல உரிமைகளும் எதிர்க்கட்சி தலைவர் என்ற அடிப்படையில் எனக்குள்ளது. ஆனால் அதற்கான அனுமதியானது நேற்று முன்தினம் பறிக்கப்பட்டது. இது மிகவும் அபாயகரமான ஒருசெயல்பாடாகும்.

பொதுநலவாய கொள்கைகளின் அடிப்படையில் ஜனநாயகம், மனித உரிமைகள் போன்றவற்றுக்கு மதிப்பளிக்கப்படவேண்டும். ஆனால் அதனை செய்யாது கொள்கைக்கு முரணாக செயற்படுவதானது எந்த வகையிலும் நியாயமில்லை.

இன்று சட்டம் ஒழுங்கு நகைச் சுவைக்கிடமான ஒன்றாக மாறியுள்ளது. இந்த நிலைமையினை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு இடமளிக்கக்கூடாது. எனவே இதற்கெதிராக நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம். (அ-2)

## சவுதி அரேபியாவில் கொலை செய்யப்பட்ட பெண்ணின் புதைகுழி தோண்டப்பட்டது

சவுதி அரேபியாவில் கொலை செய்து புதைக்கப்பட்டதாக தெரிவிக்கப்டும் இலங்கைப் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அரேபிய செய்திகளை மேற்கோள்காட்டி இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அநுராதபுரத்தை சேர்ந்த 44 வயதுடைய சித்ரா ரணசிங்க என்ற பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவருடைய சடலம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து மற்றுமொரு இலங்கைப்பெண்ணுக்கு சொந்தமான றியாத்திலுள்ள வீட்டு வளாகத்திலேயே புதைக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வீடொன்றில் பணிப் பெண்ணாக கடமையாற்றும் குறித்த வீட்டிற்கு சொந்தமான பெண்ணும் விடுதியொன்றில் சமையற்காரராக பணியாற்றும் அவரது கணவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுவருகின்றனர்.

கொலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படும் பெண்ணின் கணவரும் மகனும் மதுபானம் தயாரித்து விற்பனை செய்த குற்றச்சாட்டில் தற்போது சவுதி அரேபியாவில் சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

இந்தக் கொலை சம்பவம் தொடர்பில் கருத்துக் கூற மறுத்துள்ள தூதரக அதிகா ரிகள் இது தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

கொலை செய்ததாக தெரிவிக்கப்படும் இப்பெண்ணின் இலங்கையிலுள்ள மற்று மொரு மகன் மரண சடங்குகளை மேற்கொள்வதற்காக தாயாரின் சடலத்தை இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு தூதரகத்திடம் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் தூதரக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

## ஆனையிறவு கடலேரியில் இறால் குஞ்சுகள் வளர்க்க தீர்மானம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள் குடியேறிய மீனவர்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் ஆனையிறவு கடல் ஏரியில் இறால் குஞ்சுகள் வளர்க்கப்படவிருக்கின்றன.

இதற்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டுவரும் கடற்தொழில் நீரியல் வள அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய நீர் உயிர் வாழ் அதிகார சபையினர் இது சம்பந்தமான அறிவூட்டல்களை மீனவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இது சம்பந்தமான அறிவூட்டல் கருத்தரங்கு கடந்த வாரம் கண்டாவளை பிரதேசத்தில் தர்மபுரம், தட்டுவன் கொட்டி, கண்ணகிநகர், புலோப்பனை ஆகிய இடங்களில் நடைபெற்றது.

தேசிய நீர் உயிர் வாழ் அதிகார சபையினரால் நடத்தப்பட்ட அறிவூட்டல் கருத்தரங்கில் கிளிநொச்சி மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள், கடற்தொழிலாளர்கள் சங்க பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். மீனவர்களின் அபிப்பிராயத்தை அறியும் பொருட்டு நடத்தப்பட்ட இக் கருத்தரங்கில் இறால் குஞ்சு வளர்ப்பதனால் மீனவர்களுக்கு ஏற்படக்கூடிய நன்மை தீமை உட்பட்ட பல விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

(அ-2)

## கழிவுப் பொருட்களில் மின்சாரத்தை உற்பத்தி செய்ய இரண்டு திட்டங்கள்

(கொழும்பு)

கழிவுப் பொருட்களை பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இரண்டு திட்டங்கள் மேல் மாகாண சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கரதியான மற்றும் கடுவெல ஆகிய பகுதிகளில் இந்த மின் உற்பத்தி நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருவதாக மேல் மாகாண சபையின் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் நலின் மான்னப்பெரும தெரிவித்தார்.

மலேசியா மற்றும் இந்தியாவிலுள்ள இரண்டு நிறுவனங்கள் இந்த திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் இதன் ஊடாக 50 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்யத்திட்டமிடப்பட்டுள்ளது. (அ-2)

## அதிவேகபாதை விதிமுறைகளை மீறும் சாரதிகளுக்கு நடவடிக்கை

(கொழும்பு)

தெற்கு அதிவேக மார்க்கத்தின் விதிமுறைகளை மீறுகின்ற சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த வீதியினூடாக போக்குவரத்தில் ஈடுபடுகின்ற சாரதிகள் வேகக்கட்டுப்பாடுகளை பின்பற்ற வேண்டும் என அதிகார சபையின் தலைவர் ரஞ்சித் பிரேமசிறி கூறினார்.

அதிவேக மார்க்கத்திற்குள் பிரவேசிக்கின்றவர்கள் தங்களது வாகனம் செலுத்தக்கூடிய சிறந்த நிலையில் இருக்கின்றதா என்பது குறித்து கூடுதல் அவதானம் செலுத்த வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாகனத்தின் எஞ்ஜின், டயர்கள் என்பவற்றின் நிலைமை குறித்து அவதானம் செலுத்துவதாயின் தெற்கு அதிவேக மார்க்கத்தில் பயணிப்பது இலகுவாக அமையும் என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

(அ-2)

## சரத் பொன்சேகாவுக்கு எதிரான ஹைகோப் விவகார விசாரணை

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஹைகோப் விவகார வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை இடம்பெற்றது.

பொன்சேகாவுக்குப் பதிலாக இராணுவ நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கின் சாட்சிகளை முன்னாள் இராணுவத்தளபதி சார்பாக பிரசன்னமாகிய சட்டத்தரணி ருக்ஷான் நாணயக்கார மேல் நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

இராணுவ நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கு விசாரணையும் ஒரே சம்பவம் தொடர்பானவை என்பதை சுட்டிக்காட்டுவதற்காகவே இந்த சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் சட்டத்தின் பிரகாரம் ஒரே சம்பவம் தொடர்பில் ஒருவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியாது என பிரதிவாத தரப்பில் ஏற்கனவே அடிப்படை ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து இராணுவ நீதிமன்றத்திலும் மேல்நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் ஒரே மாதிரியானவை எனின் அதனை நிரூபிக்குமாறு நீதிமன்றம் அறிவித்துள்ளது. (அ-2)

## சட்டவிரோத நீர் பயன்பாடு; 11 மில்லியன் ரூபா அபராதம்

கடந்த மே மாதம் முதல் நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் மோசடியான முறையில் நீரைப்பெற்றுக் கொண்டவர்களிடமிருந்து சுமார் 11 மில்லியன் ரூபா அபராதம் அறவிடப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை தெரிவித்துள்ளது.

சபைத் தலைவரின் மேற்பார்வையில் விசேட குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்களின் மூலம் அபராதம் அறவிடப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களில் மோசடியாக நீரைப்பெற்றுக் கொண்ட 142 இடங்கள் சுற்றிவளைக்கப் பட்டுள்ளன.

கொழும்பு மற்றும் மொரட்டுவை ஆகிய பிரதேசங்களிலேயே மோசடியாக நீரைப் பெற்றுள்ளமை தொடர்பில் கூடுதலாக பதிவாகியுள்ளது எனவும் சபை சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

## அமெ-இலங்கைப் பிரச்சினை உதவித்திட்டத்தை பாதிக்காது

### யூ.எஸ்.எயிட் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான அரசியில் பிரச்சினை இலங்கைக்கான அமெரிக்க உதவி மீது தாக்கம் செலுத்தாது என சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகம் கூறியுள்ளது.

யூ.எஸ்.எயிட்டின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வில் கலந்து கொண்ட போது யூ.எஸ்.எயிட்டின் இலங்கைக்கான பணிப்பாளர் பெட்னரிடம் யூ.எஸ்.எயிட் உதவிகளை ஒதுக்கும்போது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகள் கருத்தில் கொள்ளப்பட்டனவா என வினவப்பட்டது.

இதற்கு பதிலளிக்கும்போது அப்படி ஏதும் இல்லை. நாம் நல்லிணக்கம், புனருத்தாரணம் பற்றி அக்கறையாக உள்ளோம் என அவர் கூறினார்.

அண்மையில் கொண்டுவரப்பட்ட கம்பனிகளை சுவீகரிக்கும் சட்டம் தொடர்பில் கேட்ட போது எதிர்காலம்பற்றி ஊகிப்பதை நான் விரும்பவில்லை. அமெரிக்க முதலீட்டின் மீது இந்த சட்டத்தில் தாக்கம் பற்றி கருத்துக் கூற விரும்பவில்லை என அவர் கூறினார். (எ-5)

## சபாநாயகரின் தடை அறிவிப்பு குறித்து குணவர்த்தன அதிருப்தி

### குற்றமிழைக்கவில்லை எனவும் தெரிவிப்பு

(கொழும்பு)

சபாநாயகர் சமல் ராஜபக்ஷவினால் விதிக்கப்பட்ட தண்டனை குறித்து பெற்றோலிய வள பிரதி அமைச்சர் சரண குணவர்த்தன அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

நாடாளுமன்றில் குழப்பம் விளைவித்த குற்றத்திற்கான பிரதி அமைச்சர் சரண குணவர்த்தனவிற்கு ஒருவார காலத்திற்கு நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள முடியாது என சபாநாயகர் உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பித்த சந்தப்பத்தில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை தாக்கியதாக சரண குணவர்த்தன மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும் தாம் அவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை எனவும் இந்தத்தண்டனை குறித்து எஸ்.எம்.எஸ்.என்ற குறுஞ்செய்தியின் மூலமே அறிந்து கொண்டதாகவும் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தமக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிராகரிப்பதாக கூறியுள்ள அவர் சம்பவம் இடம்பெற்ற தினம் நாடாளுமன்றின் மேல் மாடியில் தாம் அமர்ந்திருந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பத்திரிகை மற்றும் தொலைக்கட்சி உள்ளிட்ட ஊடகங்கள் செய்திகளை வெளியிடப்பட்டிருந்தன. அதில் புகைப்படத்திலோ அல்லது காணொளிகளிலோ தாம் எவரையும் தாக்குதல் போன்ற செய்திகள் வெளியிடப்படவில்லை எனவும் தமக்கு தெரிந்த வரையில் தர்ம குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## இந்திய அரசின் வீட்டுத்திட்டத்தை விரைவில் முன்னெடுக்க முடிபு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெயர்ந்தவர்களுக்காக இந்தியா அமைத்துக்கொடுக்கும் 50 ஆயிரம் வீட்டுத்திட்டத்தின் பணிகளை விரைந்து முன்னெடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்திய மத்திய அமைச்சரவையில் இது தொடர்பில் கலந்தாலோசனைகள் இடம் பெற்றுள்ளன. இந்தியாவின் 50 ஆயிரம் வீட்டுத்திட்டத்தின் கீழ் உரிய முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டு வருகிறது.

திட்டம் அறிவிக்கப்பட்டு ஒரு வருடமாகியும் ஆயிரம் வீடுகள் மட்டுமே வடக்கில் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் இந்திய அரசாங்கத்தின் நிர்மாணத்துறை நிறுவனங்களான ஹிந்துஸ்தான் பிரபேப், ஹிந்துஸ்தான் ஸ்டீல்வேக்ஸ் மற்றும் தேசிய கட்டட நிர்மாண கூட்டுத்தாபனம் என்பன இணைந்து இந்த வீடமைப்புத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன்படி இலங்கையின் வடக்கு-கிழக்கில் உள்ள மக்களுக்கு மாத்திரமல்லாமல் மத்திய மாகாணத்திலும் இந்திய வீடுகள் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிது. (அ-2)

## பொன்சேகாவை விடுவிக்க வேண்டும் அல்லது போர் குற்றச்சாட்டுக்கள்

### அமெ.தெரிவித்ததாக சிங்கள ஊடகம்

முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவை விடுதலை செய்யாது போனால் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறும் மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக போர் குற்றச்சாட்டுகளை சுமத்த போவதாக அமெரிக்காவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார் என சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இலங்கையில் உள்ள அமெரிக்க தூதுவர் அலுவலகத்தின் ஊடாக விடுக்கப்பட்ட அழைப்பொன்றை அடுத்து தூதுவர் பற்றிசீயா புட்டினீசைச் சந்திக்க சென்றிருந்த போது அமெரிக்க தூதரகத்தின் உயர் அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பில் அமெரிக்க தூதுவர் கலந்துகொள்ளவில்லை. எனினும் அமெரிக்க தூதுரகத்தின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## மகிந்த அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம் சர்வதேசத்திற்கு அடிபணிய வைத்துள்ளது

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம் இந்த நாட்டை சர்வதேச நாடுகளின் பொருளாதார சக்திகளுக்கு பூஜை செய்யும் நாடாக மாற்றியுள்ளது.

2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் ஊழியர்களுக்கு கொடுத்த வாக்குறுதியின்படி சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. தனியார் ஊழியர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோருக்கு எந்தவித நிவாரணங்களும் வழங்கப்படவில்லை.

இந்த வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்புத்துறைக்கே அதிகமான நிதியொதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது என்றார். (அ-2)

## அரச ஊழியர்களுக்கான சிங்களமொழி செயலமர்வு

வடமாகாணத்தின் 100 அரச ஊழியர்களுக்கு சிங்களமொழியை கற்பிப்பதற்கான செயலமர்வு ஒன்று டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதியிருந்து 24 ஆம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி திணைக்களத்தில் நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேசிய மொழிகள் மற்றும் பயிற்சி நிறுவனம் அரம்பித்துள்ள 10 நாட்கள் மொழிப் பயிற்சி வேலைத்திட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சேவையாற்றுகின்ற தமிழ் மொழிமூல அரச ஊழியர்களுக்கு சிங்கள மொழியை கற்பிக்க திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தெற்கில் அரச ஊழியர்களுக்கு தமிழ் மொழியை கற்பிக்கவும் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் அரச ஊழியர்களுக்கு சிங்கள மொழியை கற்பிக்கவும் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத்திட்டம் தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் எண்ணக்கருவில் மேற்கொள்ளப்படுகின்றது. (அ-2)

## ரணிலை நோக்கி எறிந்த தண்ணீர் போத்தல் மகிந்த அருகில் விழுந்தது

### சபையின் காணொளி பதிவில் தகவல்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் வரவு செலவத் திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றிக் கொண்டிருந்த போது ஜனாதிபதியை நோக்கி தண்ணீர்ப் போத்தலை வீசியவர் ஆளும் கட்சியைச் சேர்ந்த பிரதி அமைச்சர் சரண குணவர்த்தனவே என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 21 அம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வரவு செலவத்திட்ட உரையை நிகழ்த்திக் கொண்டிருந்த போது ஐ.தே.க உறுப்பினர்கள் வெட்கம் என்று எழுதப்பட்ட அட்டையை உயர்த்தியபடி எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அதையடுத்து ஏற்பட்ட குழுப்பத்தின் போது ஆளும்கட்சி தரப்பில் இருந்து வீசப்பூட்ட தண்ணீர் போத்தல் ஒன்று ஜனாதிபதிக்கு மிக அருகில் விழுந்தது.

அதிலிருந்து தெறித்த தண்ணீர் மகிந்த ராஜபக்ஷ மீதும் கொட்டியது. இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்ட போது சம்பவ நேரத்தில் எடுக்கப்பட்ட காணொளிப்பதிவு ஆய்வு செய்யப்பட்டது.

இதன் போது எரிபொருள்துறை பிரதி அமைச்சரான சரண குணவர்த்தனவே தண்ணீர் போத்தலை வீசியது தெரியவந்தது.

ரணில் விக்ரமசிங்கவை நோக்கி அவர் வீசியெறிந்த அந்தப் போத்தல் குறிதவறி மகிந்த ராஜபக்ஷவுக்கு அருகில் போய் விழுந்தது.

அது மகிந்த ரஜபக்ஷவின் மீது விழாது போனாலும் அதிலிருந்த தெறிந்த தண்ணீர் அவர் மீது கொட்டியதே பிரச்சனையானது. (அ-2)

## எந்தவொரு இனரீதியான கட்சியினாலும் தனித்துவ ஆட்சி அமைக்க முடியாது

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் வாழும் மூவின மக்களின் விகிதாசாரத்தை நோக்கினால் எந்தவொரு இனரீதியான கட்சியினாலும் தனித்து ஆட்சியமைக்க முடியாது. கிழக்கு மாகாணம் பல்வேறு புறக்கணிப்புகளை அனுபவித்தும் அதைப் புரியாதவர்கள் இன்னும் வடக்கு தலைமைகளுக்கு தலைகுனிந்தவர்களாக இருப்பது கவலைக்குரியது என கிழக்கு மாகாண முதல்வர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

இன்று மட்டக்களப்பு வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியினால் தனித்து ஆட்சி அமைக்க முடியுமென்று ஒரு சாராரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் ஆட்சியமைக்க முடிமென்று மற்றுமொரு சாராரும் கருதுவது நடைமுறைக்கு சாத்தியமற்றது என்று அவர் கூறினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு இன்னும் காலமுள்ளபோதிலும் அடுத்த முதலமைச்சர் தமிழரா? முஸ்லிமா? என்ற சர்ச்சையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தோற்றுவித்துள்ளது.

என்னைப் பொறுத்தவரை தனிப்பட்ட ரீதியில் யாரையும் விமர்சிப்பதில்லை. ஆனால், அரசியில் ரீதியாக விமர்சனம் செய்ய வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன்.

கடந்த காலங்களில் வட மாகாண அரசியில் தலைமைகள் கிழக்கு மாகாண மக்களை புறக்கணித்து வந்தனர் என்பது கடந்த கால வரலாறு என்றார். (அ-2)

## மாங்குளம் பகுதியில் வெடிபொருள் மீட்பு

(கொழும்பு)

வவுனியா, மாங்குளம் பிரதேசத்தில் கத்தடப்பன் வனப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருட்கள் சிலவற்றை பாதுகாப்புத் தரப்பினர் மீட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாங்குளம் பொலிஸ் நிலைய அதிகாரிகள் நேற்று முன்தினம் மாலை நடத்திய சோதனை நடவடிக்கையின் போது இவை மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்.ஜீ.பி ரவைகள்-05, பெடல் துப்பாக்கி ரவைகள்- 05, வெடி மருந்து அடங்கிய வயர் -73 அடி, 86 அடி நூல் என்பன இவ்வாறு மீட்க்ப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கம் இவற்றை மறைத்து வைத்திருந்திருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ள மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# சாதாரணத்திலிருந்து மிக சாதாரணத்திற்கு



ஆன்மீகம் 12

## கனவுச் சிறைக்குள்...



சூழ்நிலை சாதகமாக இருக்கும்போது குருமார்களும் உங்களிடம் முழு சரணாகதியை கேட்கிறார்கள். அப்படி நீங்கள் சரணாகதி ஆகாத தருணங்களில் அந்த குருமார் கள் விரிவான தத்துவங்களைப் பேசியிருக்கிறார்கள். எனவேதான் கிருஸ்ணர் அதை வெளிப்படையாகவே கேட்டார், "நீ என்னிடம் சரணடைந்தே ஆகவேண்டும். உனக்கு வேறு வழியே இல்லை" என்று. அவர் எதற்கும் பயப்படவில்லை. 'இவர் மிகவும் அகங்காரம் பிடித்தவர் என்று யாரும் எண்ணி விடுவார்களோ' என்று யோசிக்கவில்லை. "நான்தான் எல்லாம். என்னிடம் சரணடைய வேண்டும்" என்பது இன்றைய உலகில் மிகவும் ஆபத்தான சொற்றொடர். ஆனால் கிருஸ்ணர் அப்படி நினைக்க வேயில்லை. அன்றைய சூழ்நிலையும் அப்படி இருந்தது. எனவே அவரால் அவ்வளவு எளிதாக சொல்ல முடிந்தது, "நான்தான் எல்லாம் சரணடைந்தே ஆகவேண்டும். வேறு வழியேயில்லை" என்று. ஆனால், இப்போது நமக்கு அவ்வளவு சுதந் திரமில்லை. மக்கள் அந்தநிலைக்கு வர நீங்கள் அவர்களிடம் தொடர்ந்து ஏதோ ஒன்றைத் திரும்பத்திரும்ப அரைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், இந்தக் கலாச்சாரத்தில் சரணாகதி அடைவதைப் பற்றி மக்கள் முன்னர் பயிற்றுவிக்கப்பட்டிருந்தார்கள். அவர்களுடைய குழந்தைப் பருவத்திலிருந்தே அவர்களுக்கு அது போதிக்கப்பட்டிருக்கிறது. குழந்தைகளுக்கு சொல்லித்தரப்பட்டிருக்கும் × > "உன்னைவிட பெரியவர்களை பார்க்க நேர்ந்தால் நீ அவர்களை வணங்க வேண்டும். அவர்கள் கால்களை தொட்டு வணங்க வேண்டும் என்பதுதான். ஏனெனில் இங்குள்ள மொத்த தேசமுமே ஒரு காலத்தில் முக்தியை மட்டுமே நோக்கமாகக் கொண்டு வாழ்ந்து வந்தது. உலகின் இந்தப் பகுதியில் வாழ்ந்து கொண்டிந்த அனைவரும் உச்சக்கட்ட விடுதலையை அடைவதற்காக தங்களை முழுமையாக அர்ப்பணித்திருந்தார்கள். அவர்களது வாழ்க்கையில் ஒரே இலக்கு முக்தி மட்டும்தான். எனவேதான் இந்தக் கலாச்சாரத்தில் மக்கள் அவர்களின் குழந்தைப் பருவத்திலிருந்தே, அவர்களுடைய விருப்பு வெறுப்புக்காக மட்டும் வாழாதவாறு வளர்க்கப்பட்டனர். எதிர்ப்படும் ஒவ்வொன்றையும் வணங்க வேண்டும் என்பது போன்ற பல கருவிகள் உருவாக்கப்பட்டன. எனவே சரணாகதி என்பது இக்கலாச்சாரத்தில் இயல்பான ஒன்றானது.

ஆனால், இப்போது நாம் ஆங்கில முறைக் கல்வியை கடைப்பிடிக்கிறோம். எனவே ஒருவரை வணங்குவது இப்போது மிகவும் கடினமாகி விட்டது. ஏனென்றால் மேற்கில் கற்றுத்தரப்படுவது என்னவென்றால் "யாருக்கும், எப்போதும் தலை வணங்க வேண்டியதில்லை" என்பதுதான். நீங்கள் நேராக நிமிர்ந்து நிற்க வேண்டும். யாருக்கும் தலைவணங்க வேண்டியதில்லை. ஏனென்றால் நீங்கள் தலைவணங்குவதோ, காலில் விழுவதோ மேற்கில் ஒரு பலவீனமாக பார்க்கப்பட்டது. அங்கு சரணாகதி என்பது நினைத்துக்கூட பார்க்க முடியாதது. அவர்களைப் பொறுத்தவரை நீங்கள் செய்யக் கூடிய மிக மேசமான செயல் சரணடைவதுதான். சரணாகதியின் அழகை அவர்கள் ஒருபோதும் உணர்ந்திருக்கவில்லை. எனவே "காதலில் விழுதல்" என்பதைக்கூட சிறிது மாற்றம் செய்து "காதல் செய்தல்" என்று ஆக்கி விட்டார்கள். அவர்களைப் பொறுத்த வரை விழுதல், தலைவணங்குதல், சரணடைதல் எல்லாமே எதிர்மறை விடயங்கள். இப்படிச் செய்ததால் இந்த மனித குலம் தங்களுக்குள் மிக அழகிய அம்சத்தை இழந்து விட்டது. வாழ்வின் மிக அழகிய அம்சத்தை அகங்காரத்தின் கைகளில் ஒப்படைத்து விட்டார்கள். அகங்காரம் தான் இப்போது வழிபடப்படுகிறது.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# வரலாறு, அரசியல், சமூகநிலை பாடிநிற்கும் மலையகத் தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள்

03

தப்பித்து கரைசேர்ந்தவர்கள் தங்களின் உறவுகளை ஏற்றிவந்த வள்ளங்களை எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்த கண்ணீர்க் கதைகளும் ஏராளம் உண்டு. அவ்வாறு கரையேறிய மக்கள் தங்கள் உறவுகளை எதிர்பார்த்துக் காத்திருந்த ஒரு பாடலை இங்கு கவனிப்போம்.

தோணி வருகுதுண்ணு
துறைமுகமே காத்திருந்தோம் ...
தோணி கவுந்துறுச்சே...
துறைமுகமே ஆசையில்லே...!

அவர்கள் துறைமுகம் என்று தலைமன்னார் கடற் பாதையில் இறங்குதுறையைத் தான் சொன்னார்கள். இனி...மன்னார் காட்டிலிருந்து... மாத்தளைக் காடுவரை காட்டுக்குள்ளேயே குதிரையோட்டிகளின் வழிகாட்டலில் நடக்கத் தொடங்கினார்கள். இந்த பாமர மக்களின் நாட்டுப்புறப் பாடல்வரி ஒன்று இன்றைய ஆய்வாளர்களால் பெரிதாகப்பேசப்பட்டு வருகின்றது.

பாதையும் வெட்டி...
பயணம் செய்த மக்கள்

மக்கள் புழக்கமில்லாத இலங்கைக் காடுகளில் முதல் மனிதப் பயணத்தை தென்னிந்தியத் தமிழர்களே ஆரம்பித்தனர் என்பது வரலாறாகும். வன விலங்குகள் நிறைந்த இருண்ட காட்டுப்புதர்களில் காலடி வைத்து, தலைமன்னார், மன்னார் ஆகிய இடங்களிலிருந்து பய ணத்தை ஆரம்பித்து பேசாலை, செட்டிக்குளம், மதவாச்சி, தம்புள்ள, நாலாந்த மார்க்கமாய் மாத்தளையை வந்தடைந்தனர். இது நான்கு மாதங்கள் எடுத்த நடைப் பயண மாகும். காடுகள் அழிக்கப்பட்டன. கோப்பிச் செய்கை ஆரம்பமாகின. கோப்பி அறுவடை நடந்தது. ஒரு அரை நூற்றாண்டு கால துயரம் குறையத் தொடங்கியது. இருந்தும் இங்கே வாழ விரும்பாத மக்கள் இந்தியா திரும்ப வேண்டும் என்றே கலங்கி நின்றார்கள்.

கப்பலேறி... கடல் தாண்டி...
காடும் மலையும் ஏறி...
காலம் செழுச்சி -நாம
காணிப் போயி சேரலியே... என்ற

ஏக்கப் பெருமூச்சோடு காலத்தை ஓட்டியவர்கள் இந்தியாவை விட்டு இலங்கைக்கு வந்தது எவ்வளவு பெரிய தவறு என்று தங்களுக்குள்ளேயே மனம் நொந்து கொண்டார்கள்.

பாதையிலே வீடிருக்க..
பழனிச்சம்பா சோறிருக்க..
எரும தயிரிருக்க..
ஏண்டி வந்தோம் கண்டி சீமை...?

இத்தனை வளங்களும் சொந்த

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"

நாட்டில் இருக்க இலங்கைக்கு ஏன் வந்தோம்.. என்று வருந்திப் பாடிய பாடலைப் பார்த்தோம்... இலங்கையை அவர்கள் கண்டி சீமை என்றே சொன்னார்கள். அவர்களது ஏக்கப் பெருமூச்சு ஒரு பாடலுடன் நின்று விட வில்லை.

அடியளந்து வீடு கட்ட
ஆண்ட மனை அங்கிருக்க ...
பஞ்சம் பொழைப்பதற்கு
பாற்கடலைத் தாண்டி வந்தோம்...
பஞ்சம் பொழைக்கல்லியே- நாம
பட்டினம் போய்ச் சேரலையே...!

என்று புலம்பல்கள் தொடர்ந்து நீடித்தன. தங்கள் தொழில், வழி துயரங்களை ஒரு பாடலின் மூலம் பிரிட்டிஷ் வெள்ளைக்கார தோட்ட அதிகாரியின் கொடுமையை ஒரு கூலிப் பெண் இங்கே கூறுகின்றாள்.

கோணக் கோண மலையயேறி ...
கோப்பிப் பழம் பறிக்கையிலே ...
ஒரு பழம் தப்பிச்சின்னு..
ஒதைச்சானே சின்னத் தொரை...!

பெருந்தோட்ட விவசாயம் என்பது காடுகளைச் சேர்ந்த விவசாயமாகும். இங்கு வயல்வெளி, வேலைத்தளம் என்று பண்படுத்திய விளை நிலங்கள் என்பதற்கே இடமில்லை. அன்று பிரிட்டிஷ்காரர்கள் காடுகளில் கட்டிக் கொடுத்த கூடாரங்களில் குடியிருந்து கொண்டு, கொழுந்து பறிக்கச் செல்ல வேண்டும். குழந்தைகளை குடிசைகளில் விட்டுச்செல்ல முடியாது. காட்டு மிருகங்கள் காவிச் சென்று விடும். ஆகவே, கூலித் தொழிலாளப் பெண்கள் கூடவே தங்கள் குழந்தைகளை காடுகளுக்குத் தூக்கிச் செல்வார்கள். காட்டு மரங்களில் தொட்டில் கட்டி குழந்தைகளை தூங்கவிட்டு தொழில் செய்வது வழக்கம். இவ்வாறான நிலையில் ஒரு குழந்தைக்குத் தாயான பெண்ணின் காட்டுத் தொட்டிலையும், காட்டுத் தாலாட்டையும் இங்கே கவனிப்போம்.

ஆராரோ ஆரிரரோ- என் கண்ணே
ஆரடிச்சி நீ அழுதாய்.. சீரான சீமை விட்டு
சீரழியக் காடு வந்தோம்..
கூடை தலை மேலே..
காடு மலைகளிலே..
கரடி, புலி, ஆனை, சிங்கம்..
கூடி வாழுமிந்த
கொடுவனத்தே நித்திரை போ...!

இப்படி ஒரு தாலாட்டுப் பாடலை எந்த இனத்திலும் எந்த மொழியிலும் நாங்கள் கேட்டிருக்க மாட்டோம். தொட்டில் என்பது வீடுகளில் கட்டப்படும் ஒரு தூளி. தாலாட்டு என்பது அழுகையை நிறுத்தப் பாடும் ஆனந்தப் பாடலாகும். ஆனால் ஒரு தென்னந்தியத் தமிழ்க் குடும்பம் பஞ்சம் பிழைப்பதற்கு, நாடு கடந்து கடல் கடந்து பெருந்தோட்டம் எனும் காடுகளில் தொட்டில் கட்டி தாலாட்டுப்பாடிய வரலாற்றை அறிகின்றோம். இந்தக் காட்டில் பாடப்பட்ட தாலாட்டு அழுகின்ற குழந்தையின் அழுகையை நிறுத்துவதற்கு தன் அழுகையையே தாலாட்டாகப் பாடிய ஒரு புதுமை வரலாற்றை இந்த மக்களின் வரலாறு படைத்துள்ளது.

மு.சிவலிங்கம்

(தொடரும்)

# டெங்குநோய் விழிப்புணர்வு தொடர்பான கூட்டம்

(கொழும்பு)

டெங்குநோய் பரவுவதை கட்டுப்படுத்தும் நோக்குடன் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பணிமனையின் கேட்போர்கூடத்தில் இன்று வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு கூட்டம் நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் உள்ளூராட்சிமன்ற பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனத்தினர், இராணுவத்தினர், பொலிஸார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டம் மற்றும் வவுனியாவை அண்டிய மாவட்டங்களில் டெங்குநோயின் தாக்கம் கண்டறியப்பட்டுள்ளது. இந்தநிலையில் வவுனியா மாவட்டத்தில் முன்கூட்டிய செயற்பாட்டாக தொண்டர்கள், இராணுவத்தினர் மற்றும் பொலிசாரின் உதவியுடன் வீடு வீடாகச் சென்று பரிசோதனைசெய்து டெங்கு நுளம்பு பரவும் இடங்களை கண்டுபிடித்து அழிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வது தொடர்பில் கலந்துரையாடப்படுமெனவும் அவர் கூறினார். (அ-2)

# பல்கலைக்கழக மாணவர் ஆறுபேருக்கு வகுப்பு தடை

(கொழும்பு)

ரஜரட்டை பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் பதிவாளர் உள்ளிட்ட சிலரை தடுத்துவைத்தமை காரணமாக மருத்துவ பீட மாணவர்கள் ஆறு பேருக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக பல்கலைக்கழக ஒழுக்காற்று குழு விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக ரஜரட்டை பல்கலைக்கழக துணைவேந்தர் கே.ஏ.நந்தசேன கூறினார்.

ஆறு மாணவர்களுக்கு ஐந்து வார வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் ஒழுக்காற்று விசாரணையில் மாணவர்கள் குற்றவாளிகளாக காணப்படும் பட்சத்தில் அவர்களுக்கு உரிய தண்டனையை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக அவர் தெரிவித்தார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்கள் அடையாளம் காணப்படும் பட்சத்தில் அவர்கள் மீது வகுப்புத்தடை மற்றும் ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்வதாக மேற்படி பல்கலைக்கழக துணைவேந்தர் மேலும் கூறினார். (அ-2)

# சொத்து விபரம் வெளியிடாத இருவர் மீது நடவடிக்கை

## தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

(கொழும்பு)

சொத்து விபரங்களை வெளியிடாத உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய அறிவித்தார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றியீட்டிய உறுப்பினர்களுக்கு தமது சொத்து விபரங்களை கையளிக்க கடந்த 25 ஆம் திகதி வரை காலக்கெடு வழங்கப்பட்டது.

குறித்த காலப்பகுதியினுள் தகவல் வழங்காத கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஒருவர் மீதும் மற்றும் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஒருவர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். (அ-2)

## ஆன்மீக சொற்பொழிவு

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் ஞாயிற்றுக்கிழமைதோறும் நடைபெறும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி காலை 10 மணிக்கு *மகாபாரதம்* தொடர் சொற்பொழிவினை பண்டிதர் பொன். சுகந்தன் ஆற்றவுள்ளார். (அ)

# போதைப்பொருள் விற்பனை செய்த 102பேர் கைதாகினர்

கடந்த ஆண்டு இரண்டு மாதங்களுக்கு முன் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட 102 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

கைதானவர்களில் பெரும்பாலானோர் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு பிரதேசத்திற்கு பொறுப்பான பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பிரதேசத்தில் போதைப்பொருள் விற்பனையை ஒழிப்பதற்காக 21 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


கைது செய்யப்படுகின்ற போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுகின்றவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக தனியான பொலிஸ் குழுவொன்றினை நியமித்துள்ளதாக பொலிஸ் உயரதிகாரி கூறினார். எதிர்காலத்தில் கைது செய்யப்படும் போதைப்பொருள் பாவனையாளர்களுக்கு நீதிமன்ற உத்தரவுக்கமைய புனர்வாழ்வளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சந்தேகநபர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும்போது வழக்கு செலவுகளுக்கு பணம் தேடும் பொருட்டு அவர்கள் மேலும் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபடுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதனால் சந்தேக நபர்களுக்கு புனர்வாழ்வளிக்க நடவடிக்கை மேற்கொள்வதாக பொலிஸ் உயரதிகாரி மேலும் குறிப்பிட்டார். (அ-2)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## அந்தியேட்டி அழைப்பிதழும்



முகவுரை
11
10
1927

முடிவுரை
02
11
2011

அணைகடந்த அன்பு மழையில்
எமை வளர்த்தெடுத்த தெய்வமே
அரவம் தீண்டிய நொடியிலேயே
அணைந்ததேனோ – தந்தையே
ஆறாத மனதுடனே புலம்புகின்றோம்
உளம் வெந்தே கொதிக்குதையா
உதவியின்றித் தவிக்கையிலே
உம் நினைவு வாட்டுதையா
ஓடோடி வருவீர்களா?

02.11.2011 அன்று காலமாகிய வேலுப்பிள்ளை பொன்னம்பலம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு அனுதாபத்தை தொலைபேசி மூலமும் வலைப்பின்னல் மூலமும் தெரிவித்தவர்களுக்கும் நன்றி கூறுவதுடன்அன்னாரின் 31 ஆம் நாள் (அந்தியேட்டி) 01.12.2011 வியாழக்கிழமை நடைபெறும்

அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

### அமரர் வேலுப்பிள்ளை பொன்னம்பலம்

அன்பே நீ அருகில் இருக்க எமக்கேன் சொர்க்கம்
அன்பே நீ அருகினில் இல்லாத போது எமக்கேன் சொர்க்கம்

குடும்பத்தினர்
டச்சு றோட்,
சித்தன்கேணி.

(6877)

# சமுர்த்தி பயனாளிகளுக்கு நன்மை கிடைக்க கூடியவகையில் திட்டங்கள் வேண்டும்

## சஜித் பிரேமதாச தெரிவிப்பு

(கொழும்பு)



சமுர்த்தித் திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பயனாளிகளுக்கு கூடுதலான நன்மை கிடைக்கக்கூடிய வகையில் திட்டத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் சகல பாகங்களிலும் உள்ள மக்கள் சமுர்த்தி நலன் திட்டத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் திட்டத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். வடக்கு மக்களுக்கு சமுர்த்தி நலன் திட்டத்தை வழங்க நீண்ட காலம் எடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பணத்தை விரயமாக்கும் முயற்சிகளில் ஈடுபடாது மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலு த்த வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

தேசத்திற்கு மகுடம் போன்ற திட்டங்களின் மூலம் நன்மைகளை விடவும் தீமைகளே அதிகம் ஏற்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாகக் குறிப்பிட்டுள்ளார். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.9 வீதமான நிதியே கல்விக்காக அரசாங்கம் ஒதுக்கியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். நாட்டின் கல்வித்துறையை அபிவிருத்தி செய்ய இது போதுமானதல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ரணிலின் கழுத்துப்பட்டி செயல் நாட்டு மக்களுக்கு அவமதிப்பு

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சாடல்

(கொழும்பு)

எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்க அணிந்துவந்த பொதுநலவாய பாராளுமன்ற சங்க கழுத்துப் பட்டியினால் நேற்று முன்தினம் சபையில் சர்ச்சை ஏற்பட்டது. சபையில் விசேட அறிக்கையொன்றை முன்வைக்க ஐ.தே.க.தலைவர் ரணில் விக்ரமசிங்க முயன்றபோது ஆளும் தரப்பினர் அதற்கு ஆட்சேபனை தெரிவித்தனர்.

இது தொடர்பில் தனது தீர்ப்பை இன்று அறிவிப்பதாக சபாநாயகர் அறிவித்ததையடுத்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தனது கழுத்துப்பட்டியை தூக்கிக் காட்டியவாறு சபையை விட்டும் வெளியேறினார்.

இது தொடர்பில், ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்த ஏ.எச்.எம். அஸ்வர் எம்.பி.சபையில் வைத்து கழுத்துப்பட்டியை கழற்றுவது நிலையியற் கட்டளைகளுக்கு முரணானது என்று குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவரின் இந்த நடவடிக்கை தொடர்பில் அமைச்சர்களான ஜீ.எல். பீரிஸ், ராஜித சேனாரத்ன, தினேஷ் குணவர்த்தன ஆகியோரும் கருத்து தெரிவித்தனர்.

இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடைபெற இருக்கையில் எதிர்க்கட்சித் தலைவர் தேசத்துரோக நடவடிக்கையில் ஈடுபடுவதாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். பொதுநலவாய சங்க கழுத்துப் பட்டியை கழற்றியதால் அரசாங்கத்திற்கோ பாராளுமன்றத்துக்கோ அன்றி நாட்டு மக்களுக்கு செய்த அவமதிப்பு என அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். (அ-2)

# வடக்கு கிழக்கிலும் இறப்பர் பயிர் செய்கைக்கு திட்டம்

## மஹிந்த சமரசிங்க

(கொழும்பு)



இறப்பர் உற்பத்தியை ஊக்கவிக்கும் முகமாக வடக்கிலும் கிழக்கிலும் இறப்பர் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக பெருந்தோட்டத்துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மரபு ரீதியாக இலங்கையின் தென்பகுதிகளிலும் மலையக பகுதிகளிலும் இறப்பர் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனினும் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில் இறப்பர் செய்கைகளை வடக்கு கிழக்குக்கும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதன்கீழ் வடக்கு கிழக்கில் இறப்பர் பயிர்ச்செய்கையை மேற்கொள்வது தொடர்பாக தற்போது ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைக்கு கிடைத்துள்ள 50 வீதமான ஆய்வின்படி வடக்கு கிழக்கில் மேற்படி செய்கையை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும் என்று தெரிவந்துள்ளதாகவும் இந்த ஆய்வின் பின்னர் ஆரம்பக்கட்டமாக முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களில் இச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதன்பின்னர் அது கிழக்குக்கும் விஸ்தரிக்கப்படும் என்றம் அமைச்சர் கூறினார்.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள கேள்வியை எதிர்கொள்ளும் வகையில் இறப்பர் உற்பத்தியை 150 ஆயிரம் தொன்களில் இருந்து 200 ஆயிரம் தொன்களாக அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக மஹிந்த சமரசிங்க குறிப்பிட்டார். (அ-2)

# பிரபாகரனின் புகைப்படத்தால் மட்டக்களப்பு மாணவன் கைது

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் புகைப்படத்தை தொலைபேசியில் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் மட்டக்களப்பில் மாணவர் ஒருவரைப் பொலிஸார் நேற்று முன்தினம் செய்தனர்.

மட்டக்களப்பு அரசடித்தீவைச் சேர்ந்த குறித்த மாணவன் இவ்வாண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சை எழுதிய வராவார்.

நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு காத்தான்குடிப் பகுதிக்கு சென்ற வேளையில் குறித்த மாணவனைக் கைது செய்த பொலிஸார் இன்றைய தினம் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்செய்து பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# சீரற்ற காலநிலையால் ஐந்து குளங்கள் பாதிப்பு

(கொழும்பு)

கடந்த தினங்களில் நிலவிய மழை வெள்ளத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்து குளங்கள் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாக மாவட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளர் அலுவலகம் குறிப்பிட்டுகிறது.

இதற்கமைய குறுமண்வெளி- பதுவெளிக் குளம், வாகரை-சங்கிவில்குளம் மற்றும்மாணக் குளம், கிராண்-திலிலிவெளி குளம் உள்ளிட்ட சில குளங்களே பாதிப்பிற்கு உள்ளாகி-யுள்ளன.

இதுபோன்ற வெள்ள அனர்த்தங்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் குளங்களைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பாக முதல்கட்டமாக 35 விவசாயிகளுக்கு தெளிவூட்டல்களை மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார். (அ-2)

# கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் உயர்அதிகாரி கைதானார்

(கொழும்பு)

கொள்ளைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய பொலிஸ் உயரதிகாரி ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புத்தளம் பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாகவே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம்-மன்னார் வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரிலேயே இந்த பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த வீட்டில் 70 ஆயிரம் ரூபா பணம் அண்மையில் கொள்ளையிடப்பட்டது. இந்தக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய எட்டு பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் வழங்கிய தகவலின் பேரிலேயே கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (அ-2)

# சிங்கள எம்.பிக்கள் தமிழ் கற்றுக் கொள்ள வேண்டும்

## ராதாகிருஷ்ணன் எம்.பி

(கொழும்பு)

சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டுமென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வீ.எஸ்.ராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இம்முறை வரவு செலவுத்திட்டத்தின் பிரதான யோசனைகளில் ஒன்றாக மும்மொழி சமூகம் என்ற திட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல சிங்கள உறுப்பினர்களும் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

வரவு செலவுத்திட்ட இரண்டாம் வாசிப்பில் கலந்து கொண்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழியைக் கற்றுக் கொள்வதற்கு சிங்கள மக்கள் கூடுதல் முனைப்பு காட்ட வேண்டும் எனவும் இதன்மூலம் இரு சமூகங்களுக்கு இடையிலான பிணைப்பை மேம்படுத்த முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும் காலங்களில் பாராளுமன்ற விவாதங்களின் போது தாம் சிங்கள மொழியில் கருத்துக்களை முன்வைக்கத் திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பெருந்தோட்ட மக்களின் வீட்டுப் பிரச்சினைகளுக்கு காத்திரமாக தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பெருந்தோட்டப் பகுதிகளில் இந்த அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட வீடமைப்பு திட்டங்கள் எதிர்பார்த்தளவு வெற்றியை அளிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஆர்ப்பாட்டத்தில் தேங்காய் உடைத்து எதிர்ப்பை வெளிப்படுத்தினார் ரணில்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள போராட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தேங்காய் உடைத்து ஊர்வலமாகச் சென்று தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


நாட்டில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகா உட்பட அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் எனவும் ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# இலங்கையில் எச்.ஐ.வி./எயிட்ஸ் -சமூகப் பார்வை

2

குறிப்பாக இந்நோய்த் தொற்றிலிருந்து தப்பிக் கொள்வதற்கான வழிமுறைகளைப் பின்பற்ற தவறுகின்றமையும் ஒரு காரணியாக அமைகின்றது.

தென்னாசியாவில் இலங்கையில் எழுத்தறிவு பெற்றவர்கள் அதிகமாக இருக்கின்ற நிலையிலும் கூட தப்பிக் கொள்வதற்கான வழி முறைகளை பின்பற்றாமை இதனை அதிகரிக்கவே செய்யும். குறிப்பாக இலங்கையில் ஆணுறை பாவிப்ப




வர்களின் எண்ணிக்கை 3.0 சதவிதம் மட்டுமேயாகும். வருடமொன்றுக்கு சராசரி ஒருவர் 1.2 ஆணுறைகளையே பயன்படுத்துகின்றனர்.

குறிப்பாக பாலியல் தொழிலாளர்கள் குறைந்தளவிலேயே ஆணுறையினைப் பயன்படுத்துகின்றனர். இதனால் STD மற்றும் எச்ஐவி/ எயிட்ஸ் தொற்றுக்கு ஆளாகும் நிலை ஏற்படுகின்றது.இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட வேறொரு ஆய்வில் 45.0 சதவீதமான பெண் பாலியல் தொழிலாளர்களும் 70.0 சதவீதமான ஆண்களும் பாதிப்புக்குள்ளாகி கிளினிக்குகளுக்கு செல்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண் தனது பங்காளிக்கு ஆணுறை அணிதல் வேண்டும் வலுவான கண்டிப்பினை வழங்க முடியாமை,அல்லது திருப்தி நிலையில் பாதிப்பு ஏற்படும் என்ற நிலைப்பாடு இத்தொற்றினை பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பதை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

இலங்கையில் இளைஞர்களிடையேயான எச்.ஐ.வி/எயிட்ஸ் தொற்று பற்றி அறிந்து கொள்வதற்குரிய தகவல்கள் பெருமளவில் கிடைக்கப்பெறவில்லை. எனினும் UNICEF இதுதொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் சிறிய எண்ணிகையினர் மற்றும் STD எச்.ஐ.வி/ எயிட்ஸ் தொற்று இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

2007 இல் 22 பேரும் 2010 இல் 40 பேரும் 2011 இல் 80 இற்றுப் பட்டவர்களும் அடையாளம் காணப் பட்டுள்ளனர். இதற்கு பாடசாலையிலிருந்து இடைவிலகல், பாலியல் தொடர்பான அறிவின்மை, போதைவஸ்துப்பாவனை, வேலை வாய்ப்பின்மை போன்ற பல காரணிகள் இளைஞர்களை இந்நிலைக்கு உள்ளாக்கும் காரணிகளாகவுள்ளன.

அட்டவணை-1
எச்.ஐ.வி/எயிட்ஸ் தொற்றிகள்-2010

| வயது | ஆண் | பெண் | மொத்தம் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 9 < | 27 | 15 | 43 | 3.3 |
| 10-19 | 4 | 4 | 8 | 0.6 |
| 20-29 | 148 | 102 | 250 | 19.0 |
| 30-39 | 279 | 226 | 505 | 38.3 |
| 40-49 | 211 | 122 | 333 | 25.3 |
| 50 > | 81 | 42 | 123 | 9.3 |
| தெரியாத நிலையில் | 34 | 21 | 55 | 4.2 |
| மொத்தம் | 784 | 533 | 1317 | 100.0 |

மேலும் அட்டவணை-1 இன் பிரகாரம் இலங்கையின் எச்.ஐ.வி/ எயிட்ஸ் தொற்றிகள் வயது ரீதியாக தரப்பட்டுள்ளன. குறிப்பாக 20-39 வயதிடைவெளியிலேயே அதிகளவில் காணப்படுகின்றனர்.

இத்தொற்றினைக் கொண்டவர்கள் பெருமளவிற்கு நகரம் சார்ந்த பகுதிகளில் தான் அதிகமாகவுள்ளமையையும் காணக்கூடியதாகவுள்ளது. குறிப்பாக மாகாண ரீதியில் பின்வருமாறு அமைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. (அட்டவணை-02)

தலைநகரம் மற்றும் பிரதான நகரங்கள், சுற்றுலா மையங்கள், வறுமை

அட்டவணை-2
மாகாண ரீதியில் எச்.ஐ.வி/எயிட்ஸ் காவிகள்

| மாகாணம் | நோயாளர் | சதவீதம் |
|---|---|---|
| மேற்கு மாகாணம் | 753 | 57.2 |
| வடமேல் மாகாணம் | 110 | 8.1 |
| மத்திய மாகாணம் | 102 | 7.7 |
| தென் மாகாணம் | 76 | 5.8 |
| வட மாகாணம் | 53 | 4.0 |
| கிழக்கு மாகாணம் | 44 | 3.3 |
| சப்பிரகமுவ மாகாணம் | 46 | 3.5 |
| வடமத்திய மாகாணம் | 35 | 2.7 |
| ஊவா மாகாணம் | 17 | 1.3 |
| தெரியாத தகவல் | 81 | 6.2 |
| மொத்தம் | 1317 | 100.0 |


யுடன் கூடிய தொழிலாளர்கள் மேல் மாகாணத்தில் காணப்படுவதால் இங்கு தொற்றுக்குள்ளானோர் 57.2 சதவீதத்தினராகவுள்ளனர். மாவட்ட ரீதியாக STD மற்றும் எச்.ஐ.வி. எயிட்ஸ் உடன் இருப்பதாக அடையாளம் காணப்பட்டவர்களிடையே முதலிரு மாவட்டங்களாக கொழும்பு, கம்பகாவும் விளங்குகின்றது. இதற்கடுத்த நிலையில் குருநாகல் மற்றும் யாழ்ப்பாண மாவட்டமும் இருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இருப்பினும் 2010 இல் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஐவர் மட்டுமே அடையாளம் காணப் பட்டுள்ளனர். இவ்வாண்டில் 1345 பேர் STD கிளினிக்கில் பதிவு செய்து சிகிச்சை பெற்றுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளில் இத்தொற்றுக்கான வாய்ப்புக்கள் அதிகரித்து வருவதாக சமூக ஆர்வலர்களினால் தெரிவிக்கப்படும் நிலையில் அதற்கான வைத்திய சிகிச்சை கொழும்பிலோ அல்லது வேறு நகரங்களிலோ மேற்கொண்டு வரலாம் என்ற ஐயப்பாடு இருப்பதாக அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொதுவாக உலகில் 90 சதவீதமான எச்.ஐ.வி./எயிட்ஸ்சினால் பாதிக்கப்பட்டவர்கள் வளர்முக நாடுகளிலேயே வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் வறுமையின் கோரப்பிடியில் அகப்பட்டவர்கள்.இவர்களிடையே இந்நோய்த் தொற்றினை கொண்டதற்கான அறிகுறிகளை கண்டறிவதில் பின் நிற்கின்ற காரணமாகவோ அல்லது நோய்பற்றிய அறிவின்மை காரணமாகவோ நோய் வேகமாகப் பரவுவதற்கு காரணிகளாக அமைந்துள்ளது.அதுமட்டுமல்லாது இந்நோய்க்குரிய உடற்பரிசோதனை செய்வதற்குஅதிகளவில் செலவிட வேண்டியிருப்பதால் அதனை தாங்கி கொள்ளக் முடியாத நிலையில் பரிசோதனையை தவிர்த்துக் கொள்ளும் நிலையும் ஏற்படுகிறது. இவர்கள் வாழுமிடங்களில் தொடர்பு சாதன வசதிகள் குறைவாக காணப்படுவதுடன் எழுத்தறிவின்மையும் இந்நோயை வரவேற்கும் காரணிகளில் ஒன்றாகும்.இத்தொற்று நோய் ஏற்பட்ட காலத்திலிருந்து பிறக்கும் குழந்தைகளும் பாதிக்கப்பட்டவர்களாக இருப்பதால் அவர்கள் தம் கல்வியை தொடர்வதற்கு தடையாகவுமுள்ளது.

இவ்வாறான நோய் அறிகுறிகள் ஏற்பட்டவர்கள் தொழில் துறையிலிருந்துதானாகவே விலகியவராகவோ அல்லது விலக்கப்பட்டவராகவோ காணக்கூடியதாக இருக்கிறது. இதனால் பாதகமான சமூக பொருளாதார நிலைக்குட்படுத்தப்படுவதுடன் சமூக நிந்தைக்கும் உட்படுத்தப்படுகின்றனர்.

அதாவது சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படுகின்றனர் அல்லது சமூகத்திலிருந்து விலகி வாழ வேண்டும் என்ற நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.ஆனால் சில ஆபிரிக்க நாடுகளில் இந்நோய்க்குறி கொண்டவர்களை அரசு ஒதுக்கி வைக்காது தொழிலில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்நோயினால் இறக்கும் பெற்றோர்களது பிள்ளைகள் பாடசாலைகளிலிருந்த ஒதுக்கப்படும்



பேராசிரியர் கா. குகபாலன்
தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
வேலணைப் பிரிவு

நிலை காணப்படுவது மட்டுமல்லாது அவர்கள் அநாதைகளாக்கப்படுகின்றனர்.மேலும் நோய்க்குள்ளானவர்களை யார் பராமரிப்பது என்ற பிரச்சினையும் எழுகின்றது.

மேலும் நோயின் அறிகுறிகள் கண்டவர்கள் சமூகத்தில் நடமாடுவதற்கு வெட்கப்படும் நிலைமை காணப்படுவது மட்டுமல்லாது வருமானத்தை இழத்தல், இறப்பு பற்றிய பயஉணர்வு, மனத்தளர்ச்சி, வெறுப்புநிலை,நம்பிக்கையீனம், கவலை, கோபம்,பிரத்தியேக தன்மையிழத்தல் மற்றும் வாழ்க்கையில் பற்றற்ற நிலைக்குள்ளாதல் நிலை ஏற்பட வாய்ப்பளிக்கிறது.

இந்த தொற்று வராமல் இருப்பதற்கு தனிப்பட்டவர்களிலிருந்து சர்வதேச நிறுவனங்கள் வரை செயற்படுவதன் மூலமே சாத்தியப்படலாம். பாலியல். உறவு கொள்பவர்கள் மிகுந்த மனக்கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும்.கூட நட்பினை வெறுப்பதுடன் பாதுகாப்பற்ற உடலுறவு எனக்கருதும் பாதுகாப்பான முறைகளைப் பயன்படுத்த வேண்டும்.குறிப்பாக ஆணுறைகளைப் பயன்படுத்தல் ஓரளவிலாவது பாதுகாக்க முடியும். அதுமட்டுமல்லாது இத்தொற்றுக் குறித்து விழிப்புணர்வுகளை சமூக நிறுவனங்கள், சுகாதார மருத்துவ நிலையங்கள், அரசுகள் மக்களிடையே கொண்டு செல்ல வேண்டும். அது மட்டுமல்லாது பாலியல் பங்காளிகளைத் தெரிவு செய்வதில் கவனம் செலுத்துதல், பாலியல் தொடர்பான கல்விக்கு ஊக்கமளித்தல், ஒரு துணைத்தன்மையை (Monogamy) ஊக்குவித்தல், சேவை அடிப்படையில் பரிசோதனை செய்தல், சுற்றுலா தலங்கள், விடுதிகளுக்கு அண்மையில் சேரிகள் அமைவதைத் தடை செய்தல் போன்றவற்றை மேற் கொள்ளல் அவசியமானது. இதற்காக புதிய மருந்து வகைகளை கண்டறிவதில் மருத்துவர்கள் பங்களிப்பும் தேவையாகும்.

இலங்கையில் இத்தொற்றினை இல்லாதொழிப்பதற்கு அரசும் அரசு சார்ந்த நிறுவனங்களும் சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் ஐ.நா. நிறுவனங்களும் ஊடகங்களும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

குறிப்பாக 45 மில்லியன் அமெரிக்க டொலரினை இதற்கான செலவிட்டு வருவதுடன் முன்காவல், மருத்துவம் மற்றும் கொள்கை உருவாக்கம் போன்றவற்றுக்கு முன்னுரிமை வழங்கிச் செயற்பட்டு வருகின்றது குறிப்பிடத்தக்கது.

(முற்றும்)

# பொருளாதார வளர்ச்சியின் போது ஒரேநேரத்தில் நன்மை கிடைக்காது

## பிரதமர் ஜயரட்ன தெரிவிப்பு



(கொழும்பு)

உள்நாட்டு பிரச்சினைகளை வெளிநாடுகளிடம் முறைப்பாடு செய்வது வெட்கம்கெட்ட செயல் என பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பு உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்களிடம் இவ்வாறு முறைப்பாடு செய்யப்படுவதாகவும் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு உள்நாட்டிலேயே தீர்வுகாண நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார வளர்ச்சி ஏற்படும் சந்தர்ப்பத்தில் ஒரேநேரத்தில் அனைவருக்கும் நன்மை கிடைக்காது எனவும் கடந்த காலங்களை விடவும் தற்போது கிராம மக்கள் அதிகளவு மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு உற்பத்திகளுக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. கோதுமைமா உற்பத்திப் பொருட்களுக்கான விலை மேலும் அதிகரிக்கப்பட வேண்டும். இந்த நிலையில் எதிர்க்கட்சிகளின் ஆலோசனைகளை கேட்டால் எந்த நாளும் பிச்சைப் பாத்திரம் ஏந்தி திரிய நேரிடும் என பிரதமர் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்ட இரண்டாம் வாசிப்பு குறித்து நேற்று முன்தினம் விவாதத்தை ஆரம்பித்து உரையாற்றிய போது அவர் இந்தக் கருத்துக்களை குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பல்கலை. மாணவர் விடுதி வசதி இரத்து

(கொழும்பு)

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழக உபவேந்தர் சுமார் 160 மாணவர்களின் தங்குமிட வசதிகளை இரத்துச் செய்து விட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மாணவர் சங்க செயலாளர் சந்திரானந்த தேரர் இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

நிர்வாகத்துக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தி வருவோர் என்று சந்தேகிக்கப்படுவோரே இந்த நடவடிக்கையால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தமக்கான விடுதி வசதிகள் இரத்துச் செய்யப்பட்டமை தொடர்பான கடிதங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாணவர்களில் 80 மாணவிகளும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக நிர்வாகம் மாணவர்களின் உரிமைப்போராட்டங்களை நசுக்கும் வகையிலேயே இவ்வாறான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக குறிப்பிட்ட அவர் இது இலங்கையின் பல்கலைக்கழக விதிமுறையை மீறும் செயல் என்றும் தெரிவித்துள்ளார். (அ-2)

# வளிமண்டலவியல் திணைக்களத்தில் வானிலை ஆய்வு நிபுணர் பதவி வெற்றிடம்

## பணிப்பாளர் எம்.பி.சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வளிமண்டலவியல் திணைக்களத்தில் வானிலை ஆய்வு நிபுணர் பதவிகளில் 6 வெற்றிடங்கள் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்கள பணிப்பாளர் எம்.டி. சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பலர் திணைக்கள பதவிகளுக்கு தெரிவாகின்ற போதும் பின்னர் வேறு உயர் சம்பளம் கிடைக்கக் கூடிய தொழில்களுக்கு சென்று விடுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வாரம் மாத்தறை பகுதியில் ஏற்பட்ட காலநிலை அனர்த்தம் தொடர்பில் வானிலை அவதான மையம் முன்கூட்டியே பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கவில்லை என்று குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் செய்தியாளர்களுடன் சந்திப்பு ஒன்றை நடத்திய அவர் கடந்த வாரம் தென்பகுதியில் சூறாவளி நிலை ஏற்படவில்லை என்று கூறினார்.

குறித்த பிரதேசத்தில் தாழ்ந்த காற்றமுத்த மண்டலமே உருவாகியிருந்தது எனினும் காற்றமுத்த மண்டலம் இந்தளவு சேதங்களை உருவாக்கும் என்று தாம் எதிர்பார்க்கவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த வாரம் தென்பகுதியில் ஏற்பட்ட காலநிலை அனர்த்தத்தின் போது வளிமண்டலவியல் திணைக்களம் உரிய முறையில் செயற்படவில்லை என்று கூறி அனர்த்தமுகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர விசாரணைக் குழு ஒன்றை அமைக்கப்போவதாக அறிவித்துள்ளார்.

இலங்கையின் தென்பகுதியில் கடந்த வாரம் ஏற்பட்ட காலநிலை சீர்கேட்டு அனர்த்தம் காரணமாக 27 பேர் வரை பலியானதுடன் 19 பேர் வரை காணாமற் போயுள்ளனர். (அ-2)




★ 1420-இங்கிலாந்தின் ஐந்தாம் ஹென்றி மன்னன் பாரிசை முற்றுகையிட்டான்.

★ 1640-போர்த்துக்கல் ஸ்பெயினிடம் இருந்து விடுதலை பெற்றது. நான்காம் ஜோவாவோ மன்னனான்ான்.

★ 1768-அடிமைகளை ஏற்றிச் சென்ற கப்பல் ஒன்று நோர்வேக்கருகில் மூழ்கியது.

★ 1822-முதலாம் பீற்றர் பிரேசிலின் பேரரசன் ஆனான்.

★ 1875-வேல்ஸ் இளவரசர் (இங்கிலாந்தின் ஏழாம் எட்வேர்ட் மன்னர்) கொழும்பு வந்தார்.

★ 1918-ஐஸ்லாந்து, டென்மார்க் முடியாட்சியின் கீழ் சுயாட்சி உரிமை பெற்றது.

★ 1918-சேர்பிய, குரோவேசிய, சிலவேனிய இராச்சியம் (பின்னர் யூகொஸ்லாவிய இராச்சியம்) அமைக்கப்பட்டது.

★ 1924-எஸ்தோனியாவில் கம்யூனிசப் புரட்சி தோல்வியில் முடிந்தது.

★ 1934-சோவியத் ஒன்றியத்தில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்பீட உறுப்பினர் செர்கே கிரொவ் கட்சித் தலைமையகத்தில் வைத்து லியொனீட் நிக்கொலாயெவ் என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ 1958-பிரான்சிடம் இருந்து மத்திய ஆபிரிக்கக் குடியரசு விடுதலை பெற்றது.

★ 1958-சிக்காகோவில் பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 92 மாணவர்கள் உட்பட 95 பேர் உயிரிழந்தனர்.

★ 1959-பனிப்போர்: அண்டார்டிக்கா கண்டத்தில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தவும் அக்கண்டத்தை அறிவியல் ஆராய்ச்சிக்கு மட்டுமே பயன்படுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டது.

★ 1960-கொங்கோ ஜனாதிபதி பத்திரிசு லுமும்பா இராணுவத் தளபதி மொபுட்டுவினால் கைது செய்யப்பட்டார்.

★ 1961-இந்தோனேசியாவின் மேற்கு நியூகினியில் மேற்கு பப்புவா குடியரசு அறிவிக்கப்பட்டது.

★ 1963-நாகலாந்து இந்தியாவின் 16 ஆவது மாநிலமானது.

★ 1965-இந்தியாவில் எல்லைக் காவற்படை அமைக்கப்பட்டது.

★ 1971-இந்திய இராணுவம் காஷ்மீரின் ஒரு பகுதியைப் பிடித்தது.

★ 1973-பப்புவா நியூகினி அவுஸ்திரேலியாவிடம் இருந்து சுயாட்சி பெற்றது.

★ 1981-யூகொஸ்லாவியாவின் விமானம் ஒன்று கோர்சிக்காவில் வீழ்ந்ததில் அதில் பயணஞ் செய்த 180 பேரும் உயிரிழந்தனர்.

★ 1981-எயிட்ஸ் நோய்க்கொல்லி அதிகாரபூர்வமாக கண்டறியப்பட்டது.

★ 1982-முதலாவது செயற்கை இருதயம் யூட்டா பல்கலைக்கழகத்தில் பார்னிகிளார்க் என்பவருக்குப் பொருத்தப்பட்டது.

★ 1989-பனிப்போர்: கம்யூனிஸ்ட் கட்சியின் ஏகபோக அதிகாரத்தை அகற்ற கிழக்கு ஜேர்மனி நாடாளுமன்றம் அதன் அரசியலமைப்பைத் திருத்தியது.

★ 1989-பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி கொரசோன் அக்கினோவை பதவியில் இருந்து அகற்ற எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்தது.

★ 1991-பனிப்போர்: உக்ரேய்ன் வாக்காளர்கள் சோவியத்திடம் இருந்து உக்ரேய்ன் முற்றாக வெளியேற வாக்களித்தனர்.

★ 2006-இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீது கொழும்பில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் அவர் காயமெதுவுமின்றி தப்பினார்.

### பிறப்புக்கள்

★ 1935-வூடி அலன், அமெரிக்க திரைப் படத் தயாரிப்பாளர், நடிகர்

★ 1954-மேதா பட்கர், இந்திய சமூக ஆர்வலர்

★ 1960-உதித் நாராயண், இந்திய திரைப் படப் பின்னணிப் பாடகர்

★ 1963-அர்ஜுன ரணதுங்க, இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர்

### இறப்புக்கள்

★ 1825-முதலாம் அலெக்சாண்டர், ரஷ்ய சார் மன்னன் (பி.1777)


★ 1973-டேவிட் பென் குரியன், இஸ்ரேலின் முதல் பிரதமர் (பி.1886)

★ 1990-விஜயலட்சுமி பண்டிட் (பி.1900)

### சிறப்பு நாட்கள்

★ போர்த்துக்கல்- சுதந்திர தினம்

★ மத்திய ஆபிரிக்கக் குடியரசு- சுதந்திர தினம்




★ உலக எயிட்ஸ் தினம்

# யாழில். போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்த விசேட வேலைத்திட்டம்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த விசேட விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை சுகாதார அதிகாரி பிரிவு ரீதியாக நடைமுறைப்படுத்த முடிவெடுத்துள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தவை வருமாறு,

யாழ். மாவட்ட புகைப்பொருள் கட்டுப்பாட்டு குழுவின் சமகால புகைப்பொருள் மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடல் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இதில் சமுதாய நலத்துறையினர், கல்வித் திணைக்களம், மாவட்ட மதுவரித் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களத்தைச் சார்ந்த முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இதில் முக்கியமாக மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள புகைப்பொருள் மதுபானம் மற்றும் போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்துதல் தொடர்பாக ஆராயப்பட்டது.

இதன்போது பாடசாலைகள் சமூகம் மற்றும் கிராமிய மட்டங்களில் விசேட விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை சுகாதார அதிகாரி பிரிவு ரீதியாக நடைமுறைப்படுத்த முடிவெடுக்கப்பட்டது.

முக்கியமாக பாடசாலை மட்டத்தில் கல்வித் திணைக்களத்தின் முன்னெடுப்பில் புகைப் பொருள், மதுபானம் மற்றும் போதைப் பொருள் பாவனைக்கெதிரான மாணவர் குழுக்களை அமைத்து மாணவர்கள் மூலமாக சக மாணவர்களுக்கு அறிவூட்டும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்குமாறு அதற்கான மாணவர் வழிப்படுத்துநர்களை பயிற்றுவிப்பதற்கான அனுசரணையை சுகாதாரத் திணைக்களம் வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கு பாடசாலைப் பிள்ளைகள் மீதான பெற்றோரின் பங்களிப்பும் ஊக்கமும் அவசியமானது எனத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் தாமாகவே புகையிலை உற்பத்திப் பொருட்களான சிகரெட், பீடி, சுருட்டு மற்றும் போதையூட்டக் கூடிய பாக்கு வகைகள், லேகியம் போன்றவற்றை விற்பனை செய்வதை தமது வாடிக்கையாளர் நலன் கருதியும் சமூக நலனைக் கருத்திற் கொண்டு நிறுத்திக் கொண்ட பல்பொருள் விற்பனையாளர்கள், உணவக உரிமையாளர்கள் போன்ற வர்த்தகப் பெருமக்களை சுகாதார அதிகாரி பிரிவு ரீதியாக தெரிவு செய்து பாராட்டு இதழ்வழங்கி கௌரவிக்கும் நிகழ்வொன்றும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மற்றும் ஏற்கனவே சட்டமாக்கப்பட்டுள்ள 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு புகையிலை உற்பத்திப் பொருட்களான சிகரெட், பீடி, சுருட்டு போன்றவற்றை விற்பனை செய்வதை இறுக்கமாக கண்காணித்து கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பற்றியும் ஆராயப்பட்டது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. (அ-6)


# ஹெரோயினுடன் கைதான மீனவர்கள்

(நெடுந்தீவு)

ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் ஐவரும் இலங்கை மீனவர்கள் மூவரும் காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவுப் பகுதியிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# யாழ்.- கொழும்பு நெடுஞ்சாலை அமைக்க இன்னும் 50 ஆண்டுகள் தேவை



## சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தையும் கொழும்பையும் இணைக்கும் அதிவேக நெடுஞ்சாலையை அமைப்பதற்கு இன்னமும் ஐம்பது ஆண்டுகள் செல்லும் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையை அமைப்பதற்கு பத்து ஆண்டு காலம் தேவைப்பட்டது. அதுபோல வடக்கு அதிவேக நெடுஞ்சாலை அமைப்பதற்கு இன்னும் பல காலம் எடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நெடுஞ்சாலை அமைப்பதாகத் தெரிவித்து பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் உலகின் மிகவும் குறுகிய மற்றும் சிறிய நெடுஞ்சாலையாக அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட நெடுஞ்சாலையை குறிப்பிட முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றில் ஹைகோப் வழக்கு விசாரணைகளில் கலந்து கொண்டு திரும்பிய போது அவர் செய்தியாளர்களிடம் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஆணைக்குழுவின் அறிக்கை பிரதிகளை ஐ.நாவுக்கு சமர்ப்பிப்பது நல்லது

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க

ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அதன்பிரதிகளை ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்துக்கும் ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கும் சமர்ப்பிப்பது சிறந்ததாகும் என்று பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும் மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதியின் விசேட தூதுவருமான மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

அமைச்சர் அங்கு மேலு ம் கூறுகையில், கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. விரைவில் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரதிகளை ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்துக்கும் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கும் அரசாங்கம் அனுப்பவுள்ளதா என்று எனக்குத் தெரியாது.

எனினும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையானது பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தவுடன் அது பகிரங்க ஆவணமாக மாறிவிடும். அதன்பின்னர் அது அனைவரும் பார்க்கக்கூடிய ஆவணமாக அமையும்.

எது எவ்வாறெனினும் ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரதிகளை ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்துக்கும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கும் சமர்ப்பிப்பது சிறந்ததாகும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதியின் தூதுவர் என்ற வகையில் நான் இவ்வாறு கருதுகின்றேன். ஐ.நா.செயலாளர் நாயகத்துக்கும் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கும் அறிக்கையின் பிரதிகள் அனுப்பப்படுவது ஆரோக்கியமான விடயமாக அமையும் என்றார். (அ-2)

# ஒட்டிப் பிறந்த இரட்டையர்களை பிரித்தெடுப்பு வெற்றியளிப்பு

(கொழும்பு)

பொரளை பிரிட்வி சீமாட்டி மருத்துவமனையில் நேற்று முன்தினம் மேலும் ஒட்டிப் பிறந்த குழந்தைகளை பிரித்தெடுக்கும் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இந்த சத்திர சிகிச்சை வெற்றியளித்துள்ளதாக மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

9 மாதங்களைக் கொண்ட ஒட்டிப்பிறந்த இக்குழந்தைகள் அந்த மருத்துவமனையின் மருத்துவர் மலித் சமரசிங்க உள்ளிட்ட சத்திர சிகிச்சைக் குழுவினரால் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சத்திர சிகிச்சையின் மூலம் ஒட்டிப் பிறந்த குழந்தைகளின் இருதயம் மற்றும் ஈரல் என்பன பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

சத்திர சிகிச்சைக்குப் பின்னர் 2 குழந்தைகளும் தேக நலத்துடன் உள்ளதாக மருத்துவமனையின் பணிப்பாளர் ரத்ம ஸ்ரீ கேவகே தெரிவித்தார். (அ-9)

# ரத்வத்தைக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

(கொழும்பு)

சொத்துக்களுக்கான வருமான மூலத்தை வெளிப்படுத்த தவறியதாக முன்னாள் அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கு எதிராக இலஞ்ச விசாரணை ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

அனுருத்த ரத்வத்தை கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயத்தினால் உயிரிழந்தமைக்கான மரண அத்தாட்சி பத்திரத்தை அவரின் சட்டத்தரணி வசந்த பாத்தகொட நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

அதையடுத்து நீதிபதி சுனில் ராஜபக்ஷ இவ்வழக்கை தள்ளுபடி செய்ததுடன் இவ்வழக்கு தொடர்பாக ஒப்படைக்கப்பட்ட பொருட்களை திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு கோரும் மனுவொன்றை தாக்கல் செய்யுமாறும் சட்டத்தரணியிடம் கூறினார். (அ-2)



## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுனர் சபை உறுப்புரிமை

### விண்ணப்பம் கோரல் 2012

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுனர் சபை உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எனவே விண்ணப்பிக்க விரும்புபவர்கள் ஆலய முகாமைத்திட்டத்தில் கூறப்பட்ட தகைமைகளை உடையவர்கள் முகாமைத்திட்டத்திற்கு அமைய விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்களை செயலாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் எனும் முகவரிக்குத் தபாலிலோ அல்லது ஆலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள தபாற் பெட்டியிலோ நேரடியாக செலுத்த இயலும்.

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் திகதி 2011.12.01 ஆம் திகதி தொடக்கம் 2011.12.31 ஆம் திகதி பிற்பகல் 5 மணி ஆகும்.

விண்ணப்பப்படிவங்களை பெற விரும்புபவர்கள் ஆலய நிர்வாகப்பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம் அல்லது தாமாகவே தயாரித்தும் விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரம் பெறவிரும்புபவர்கள் ஆலய விளம்பரப்பலகையில் பார்வையிடலாம் அல்லது நிர்வாகப்பணிமனையில் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆலய தொலைபேசி இல:-
0213213024
0213207785

செயலாளர்,
அறங்காவலர் சபை,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்.

(சி-5073)

# கைதான மீனவர்களை விடுவிக்கக்கோரி

## 5 ஆயிரம் மீனவர்கள் வேலை நிறுத்தம்

(இராமேஸ்வரம்)

இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த 28 ஆம் திகதி 700 விசைப் படகுகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். அவர்கள் இந்தியா-இலங்கை கடல் பகுதியில் மீன்பிடித்து கொண்டிருந்தனர். அப்போது அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களை இங்கு மீன்பிடிக்கக் கூடாது என கூறி விரட்டினர்.

பின்னர் தங்கச்சிமடத்தை சேர்ந்த கிளாடுவின் என்பவருக்கு சொந்தமான படகை கடற்படையினர் மடக்கி பிடித்தனர். படகில் இருந்த 5 மீனவர்களையும் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட 5 மீனவர்களையும் இலங்கை நெடுந்தீவு கடற்படை முகாமுக்கு அழைத்து சென்றனர்.

இதற்கிடையில் நேற்று முன்தினம் மாலை இராமேஸ்வரத்தில் அனைத்து மீனவர் சங்கங்களின் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் இலங்கை கடற்படையினர் பிடித்து சென்ற படகையும் 5 மீனவர்களையும் உடனடியாக விடுவித்து இராமேஸ்வரத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். இல்லை என்றால் காலவரையறையற்ற வேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்யப்பட்டது.

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட 5 மீனவர்களும் விடுதலை செய்யப்படவில்லை. இதை தொடர்ந்து இராமேஸ்வரத்தில் நேற்று முன்தினம் முதல் மீனவர்கள் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தை தொடங்கினர். இன்று 5 ஆயிரம் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை. 700 விசைப்படகுகள் கரையோரம் நிறுத்தப்பட்டுள்ளன. (அ-2)

# முல்லைப்பெரியாறு அணை பிரச்சினை; மன்மோகனுக்கு ஜெயலலிதா கடிதம்



(சென்னை)

**முல்லைப்பெரியாறு அணைப் பிரச்சினையில் கேரள அரசின் புதிய அணை கட்டும் முயற்சியால் எல்லைப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது என்றும் இதனால் பிரதமர் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதா எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.**

தமிழக முதல்வர் ஜெயலலிதா முல்லைப்பெரியாறு அணைப் பிரச்சினை தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு எழுதியுள்ள கடிதத்தின் விபரம் வருமாறு,

முல்லைப்பெரியாறு அணைப் பிரச்சினை தொடர்பாக கேரள அரசின் அனுகுமுறை குறித்து கடந்த வாரம் தங்களுக்கு கடிதம் எழுதினேன். அதன் தொடர்ச்சியாக இந்த கடிதத்தை மீண்டும் எழுதுகிறேன்.

முல்லைப்பெரியாறு அணை தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. இருந்தபோதிலும் கேரள அரசு இந்த அணை பாதுகாப்பாக இல்லை என்ற காரணத்தைகூறி இதற்கு தீர்வு அங்கு புதிய அணைகட்டுவது தான் என்று முடிவுசெய்துள்ளது.

இதற்காக பதிய அணைகட்டும் முயற்சியில் தொடர்ந்து கேரள அரசு ஈடுபட்டு வருவதாக பத்திரிகைகள் மூலமாக நான் அறிகிறேன். இதன் எதிரொலியாக கேரளாவிற்கு வரும் தமிழக அரசு பேருந்துகள் மீது விசமிகள் கல்வீசித் தாக்கி வருகின்றனர்.

பேருந்துக்கள் சேதப்படுத்தப்படுகின்றன. சில இடங்களில் பேருந்துக்கள் தடுத்து நிறுத்தப்படுகின்றன. தவிர மாநில எல்லைப்பகுதியில் பதற்றம் நிலவுகிறது. இது எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதனால் எல்லைப் பகுதியில் உள்ள தமிழ்மக்கள் பீதி அடைந்துள்ளனர். அவர்களது இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, பிரதமர் இதில் தலையிட்டு தமிழர்கள் மீது விசமிகள் தாக்குதல் நடத்துவதை தடுத்துநிறுத்த வேண்டும். கேரள அரசிற்கு இது தொடர்பாக ஆலோசனை வழங்க வேண்டும்.

மக்களின் இயல்புவாழ்க்கை பாதிக்கப்படக்கூடாது. முல்லைப் பெரியாறு அணை புதிய அணை போன்று மிகுந்த பாதுகாப்புடன் இயங்கிவருகிறது என்பதை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். இது தொடர்பான வழக்கிற்கு விசேட குழு அமைக்கப்பட்டுள்ளது. எனவே கேரள அரசின் புதிய அணைகட்டும் முயற்சியை கைவிட தகுந்த ஆலோசனை அளிக்கவேண்டும். இந்தப் பிரச்சினையை பெரிதுபடுத்தக் கூடாது என்றும் தெரிவிக்கவேண்டும்.

எனவே இரண்டுமாநில மக்களிடையே மோதல் ஏற்படுவதை தடுக்க கேரள அரசுக்கு தகுந்த ஆலோசனை அளிக்கவேண்டும் என்று நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன் என அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## பாரதச் செய்திகள்

# ஆயுத இறக்குமதிகளில் முன்னிலையில் இந்தியா

உலகிலேயே இந்தியாதான் மிக அதிகமான ஆயுதங்களை இறக்குமதி செய்து வருவதாக அமெரிக்க பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவும் தனது ஆயுத பலத்தை பல மடங்கு அதிகரித்து வருகிறது. குறிப்பாக சீன எல்லைப் பகுதியில் இந்தியாவின் படை பலம் இதுவரை இல்லாத அளவுக்கு பலப்படுத்தப்பட்டுள்ளது. எல்லையின் சில இடங்களில் சீனாவைவிட இந்தியாவின் படை மற்றும் ஆயுத பலம் சற்று அதிகமாக உள்ளது. 2011 ஆம் ஆண்டில் உலகிலேயே மிக அதிகமாக ஆயுதங்களை இறக்குமதி செய்த நாடும் இந்தியாதான்.

2006 தொடக்கம் 2010 ஆண்டுகளில் உலகின் மொத்த ஆயுத கொள்முதலில் 9 சதவீதத்தை இந்தியா கொள்முதல் செய்துள்ளது. இதில் பெரும்பாலான ஆயுதங்கள் ரஷ்யாவிடமிருந்து வாங்கப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டுக்குள் தனது படை ஆயுத பலத்தை நவீனப்படுத்த இந்தியா 4 இலட்சம் கோடி ரூபாவை செலவிட உள்ள தாகவும் அதில் வெளியிட்டுள்ளது. (அ-2)

# முல்லைப்பெரியாறுஅணை விவகாரம்; கேரளாவில் கடையடைப்பு



(மூணாறு)

முல்லைப்பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக கேரளாவில் நான்கு மாவட்டங்களில் நேற்று முன்தினம் கடையடைப்பு நடந்தது. இக்கடையடைப்பின் போது சில இடங்களில் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் முதல்வர் ஜெயலலிதாவின் உருவ பொம்மைகள் எரிக்கப்பட்டன.

முல்லைப்பெரியாறு அணை வலுவிழந்து உள்ளதாக கூறி புதிய அணை கட்ட கேரள அரசு முடிவு செய்துள்ளது. இப்பிரச்சினையில் பிரதமர் தலையிட்டு தீர்வுகாண வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி பல்வேறு போராட்டங்கள் நடந்து வருகின்றன.

ஆளும்கூட்டணிஉட்படஅனைத்து கட்சிகள் இடுக்கி -மாவட்டத்தில் கடையடைப்பு நடத்தின. நேற்று முன்தினம் இடுக்கி எர் குணாகுளம், கோட்டயம், ஆலப்புழா ஆகிய நான்கு மாவட்டங்களில் பா.ஜ.சார்பில் கடையடைப்பு நடந்தது. இந்த கடையடைப்பில் நாயர் பேரவை உட்பட சில அமைப்பைச் சேர்ந்தவர்களும் பங்கேற்றனர். சில இடங்களில் பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் முதல்வர் ஜெயலலிதாவின் உருவபொம்மைகள்எரிக்கப்பட்டன.

கேரளாவில் கடையடைப்பு நடந்ததையொட்டி தமிழகத்திலிருந்து கேரளாவிற்கு வாகனங்கள் செல்லக வகையில் சில மாவட்டங்கள் வழியாக வாகனங்கள் செல்ல தடை செய்யப்பட்டுள்ளது. பலத்தபொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. தமிழக- கேரள பகுதிகளிலிருந்து சுற்றுலா பயணிகள் வர முடியாத நிலையிலும் போடிமெட்டு, கம்பம்மெட்டு வரை உள்ள தோட்டங்களுக்குக் கூட விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள் செல்ல முடியாதநிலை ஏற்பட்டது. ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. (அ-2)

# சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீட்டை திரும்பப்பெற முடியாது

## மன்மோகன் விடாப்பிடி

(புதுடில்லி)

சில்லறை வர்த்தகத்தில் 51 சதவீதம் வரை நேரடி அந்நிய முதலீட்டை அனுமதிக்கும் முடிவைத் திரும்பப் பெற முடியாது என பிரதமர் மன்மோகன்சிங் சூசகமாகத் தெரிவித்துவிட்டார்.

சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நிறுவனங்கள் முதலீடு செய்ய மத்திய அரசு அனுமதியளித்திருப்பதற்கு எதிர்க்கட்சிகளும்திரிணாமூல், தி.மு.க உள்ளிட்ட ஆளும் கூட்டணிக் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இந்தப்பிரச்சினையால்நாடாளுமன்றம் முடங்கியிருக்கிறது.

ஆனாலும் தனது முடிவில் இருந்து பின்வாங்கப்போவதில்லை என்று அவர் மறைமுகமாகக் கூறியிருக்கிறார். சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீட்டை அனுமதிக்கும் முடிவு அவசர கதியில் எடுக்கப்பட்டதல்ல. ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின்னரே எடுக்கப்பட்டது. இது நாட்டின் வளர்ச்சிக்கு வழிகோலும் என்று அவர் கூறியிருக்கிறார்.


டில்லியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த இளைஞர் காங்கிரஸ் மாநாட்டில் இதுகுறித்து அவர் பேசியது நாட்டின் நலன்கருதியே இந்த முடிவை மத்திய அரசு எடுத்திருக்கிறது. இதன்மூலம் நமது நாட்டுக்கு நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டு வர முடியும். கிராமப் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்த வாய்ப்புக் கிடைக்கும்.வேளாண் விளை பொருள் வீணாகாது இதனால் நமது விவசாயிகளுக்கு இப்போது கிடைப்பதைக் காட்டிலும் கூடுதலான விலை கிடைக்கும். உணவுப் பதப்படுத்தல், சரக்குப் போக்குவரத்து, உணவுப் பொருட்கள் சேமிப்பு போன்ற துறைகளில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு இது உதவும்.

ஏற்கனவே பல நாடுகள் சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீட்டை அனுமதித்திருக்கின்றன. அங்கெல்லாம் சிறு வணிகர்களும் பெரிய நிறுவனங்களும் ஒரே நேரத்தில் சில்லறை வர்த்தகத்தில் ஈடுபட முடிகிறது.

நம்மைப்போன்ற பெரிய நாடுகளிலும் இது சாத்தியம்.

மத்திய அரசு தனது முடிவை யார் மீது திணிக்கவில்லை. திருப்தியிலாத மாநில அரசுகள் சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நிறுவனங்கள் ஈடுபடுவதைத் தடுக்கலாம்.

இந்த விடயத்தில் கட்சிகள் தவறான தகவல்களைப் பரப்பக் கூடாது. உண்மையை மட்டுமே மக்களிடம் தெரிவிக்க வேண்டும்.




இந்தப்பிரச்சினைக்காக நாடாளுமன்றத்தை முடக்குவது வாக்களித்த மக்களுக்கு அநீதி இழைப்பதைப்போன்றது. இதனால். நாட்டின் மரியாதைதான் குறையும் .எல்லாப் பிரச்சினைகளும் நாடாளுமன்றத்தில் விவாதித்து ஒரு முடிவுக்கு வரலாம்.

பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளை இன்னும் விரைவுபடுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கிறது.

பல மசோதாக்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். இதற்கு நாடாளுமன்றம் தடையில்லாமல் செயற்பட வேண்டியது அவசியம். ஆனால் எதிர்க்கட்சிகள் அதற்கு இடங்கொடுக்கவில்லை.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நிதி சார்ந்த பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவை மூலம் விலைவாசி கட்டுக்குள் வரும் என்கிற நம்பிக்கை இருக்கிறது என்றார் பிரதமர். (அ-2)



சென்னை மற்றும் சுற்றுப்புறப்பகுதிகளில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று முன்தினம் வானூர்தியில் சென்று பார்வையிட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

# இலங்கையில் நிலையான சமாதானம் அவசியம்

## பிரி. உயர்ஸ்தானிகர்

இலங்கையில் நிலையான சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என இலங்கைக்கான பிரித்தானிய பிரதி உயர்ஸ்தானிகர் ரொப்பி புயூலொச் தெரிவித்துள்ளார்.

பிரதி உயர்ஸ்தானிகர் இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கையின் வடக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

யுத்த வலயத்தின் நிலைமைகள் குறித்து யாழ்ப்பாண கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்கவுடன் புயூலொச் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த மேலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் போராளிகளை சமூகத்துடன் இணைத்தல், வடக்கின் அபிவிருத்திப் பணிகள் குறித்தும் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

நிலக்கண்ணிவெடி அகற்றுதல், முன்னாள் போராளிகளை சமூகத்துடன் இணைக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு பிரித்தானியா தொடர்ந்தும் ஆதரவளித்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதி உயர்ஸ்தானிகர் புயூலொச் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மற்றும் வவுனியா போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த பலருடன் பேச்சுவார்த்தை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

# அமரர் வீரசிங்கத்தின் 47 ஆவது நினைவு தினம்

யாழ். மாவட்ட கூட்டுறவு சபையினரால் கூட்டுறவுப் பெரியார் அமரர் வி.வீரசிங்கத்தின் 47 ஆவது நினைவு தினம் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் இ. இராஜாராம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், கௌரவ விருந்தினராக இலங்கை தேசிய கூட்டுறவு சபைத் தலைவர் பந்துரனவக்க ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான திருமதி மதுமதி வசந்தகுமார், யாழ்ப்பாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் க. அருந்தவநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதன் போது நினைவுப் பேருரையினை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக கற்கைகள் பீடபீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி ஆற்றவுள்ளார். (அ-2)

# சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(கிளிநொச்சி)

125 கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் பெ. சிவகுமார் குறித்த நபரை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-3)

# நீதிமன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

நுளம்பு பெருகுவதற்கேற்ற வகையில் கழிவுப் பொருட்களை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 4 பேர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகளெனக் கண்டு 4 பேருக்கும் தலா ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் தலா ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

ஆசனப்பட்டி அணியாது வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் 8 பேர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகளெனக்கண்டு 8 பேருக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் தலா ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

(கிளிநொச்சி)

அனுமதிப்பத்திரம் அன்றி அரசசாராயம் விற்பனை செய்த குற்றசசாட்டின் பேரில் நபரொருவர் பூநகரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் பெ.சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (அ-3)


# அன்னையின் ஆப்திக சிரார்த்தம்

## (முதலாம் ஆண்டு நினைவஞ்சலி)




## அமரர் ஸ்ரீமதி இராமாமிர்தம் கனகசபாபதிக் குருக்கள்

திதி:- கார்த்திகை வளர்பிறை அட்டமி (02.12.2011)

உலகமதை உணர்த்திய உத்தமியே
சத்தியம் தவறாத பத்தினியே
வீரபத்திரர் அடிதொழும் அருந்ததியே
மக்களின் மழலைகள் கண்ட மாமணியே
பாச வலையினில் படர்ந்த பார்கவியே
அச்சொட்டாய் அவனிவாழ்வு முடித்து
அரன் பதம் சேர்ந்த அம்மாவே
ஆண்டொன்று ஆனாலும் அவனியில் நீ
எம்மோடு வாழ்ந்தாக வேண்டும்
வருவாய் எனநினைத்து வாழும்.....

குறிப்பு:- அமரர் நினைவாக "வைதிக அபஸ்தம்ப தர்ம கிரியா பத்ததி" என்ற நூல் வெளியிடப்படும்

ஸ்ரீ சந்திரசேகர வீரபத்திரர் கோவிலடி,
உடுப்பிட்டி. (6879)

குடும்பத்தினர்.






பரம்பரை பரம்பரையாகத் தொடரும் உறவு

# 60 வருடகால நம்பிக்கை

ஆர்பிகோ பினான்ஸ் ஆகிய நாம் 60 வருடங்களுக்கு மேலான அனுபவத்தின் அடிப்படையில் உங்களது உழைப்பானது அதிக பெறுமதிமிக்கது என்பதை புரிந்துள்ளோம். நீங்கள் உழைப்பின் அடிப்படையில் சேமிப்பை மேற்கொள்வதற்கு எத்தகைய சிரமங்களை ஏற்க வேண்டியிருந்திருக்கும் என்பதையும் நாமறிவோம். அதனால் தான் உங்களுக்கு அதிக பெறுமதியைக் கொண்டு வரும் வகையில் முதலீட்டு வாய்ப்பினை ஏற்படுத்தித் தரும் உறுதிப்பாட்டினையும் நாம் கொண்டுள்ளோம். பல்லாயிரக்கணக்கான வாடிக்கையாளர்களுக்கு 60 ஆண்டுகளுக்கு மேலாக நாம் சேவையாற்றியுள்ளோம். அவர்களுள் பலர் மூன்று தலைமுறையாக எம்முடன் உள்ளனர். இது எம்முடைய பலத்திற்கும் ஸ்திரத்தன்மைக்கும் நல்லதோர் அத்தாட்சியாகும்.

| காலம் | மாதாந்தம் | வ.வ.வீ | முதிர்ச்சி | வ.வ.வீ |
|---|---|---|---|---|
| 1 மாதம் | - | - | 9.50% | 9.92% |
| 3 மாதம் | 9.50% | 9.92% | 10.75% | 11.19% |
| 6 மாதம் | 9.50% | 9.92% | 11.75% | 12.10% |
| 12 மாதம் | 11.00% | 11.57% | 12.00% | 12.00% |
| 24 மாதம் | 11.50% | 12.13% | 12.50% | 11.80% |
| 36 மாதம் | 11.50% | 12.13% | 13.00% | 11.60% |
| 48 மாதம் | 11.75% | 12.40% | 13.00% | 11.04% |
| 60 மாதம் | 12.00% | 12.68% | 13.00% | 10.53% |

மூத்த பிரஜைகளுக்கு ஒரு [illegible] மேலதிகமாக வருடாந்தம் 0.5 வீதம்.

[illegible] (லங்கா) லிமிட்டட் [illegible] BB-RAM) என நாம் தரப்படுத்தப்பட்டுள்ளோம். நிதி நிறுவனங்கள் 1988ன் சட்ட [illegible] இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையால் பதிவு செய்யப்பட்டது.

இன்றே எம்முடன் முதலீடு செய்யுங்கள்
தொடர்புகளுக்கு: சாஹுல் ஹமீட் 0774 773660

ஆர்பிகோ பினான்ஸ்
கம்பனி பி. எல். சி.
146, ஹவலொக் வீதி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 5.
தொ.பே: 011 5 553 663 பக்ஸ்: 011 2 500 259
மின்னஞ்சல்: info@arpicofinance.com வெப்.தளம்: www.arpicofinance.com
கிளைகள்: பதுளை - தொ.பே: 055 2224899, அநுராதபுரம் - தொ.பே: 025 5622661, முல்லைத்தீவு தொ.பே: - 021 5 677661

அநேகர் தங்கள் காலத்தின் பெரும் பாகத்தை பிறரை அவலத்திற்கு உள்ளாக்குவதிலேயே கழிக்கின்றனர். – லா புரூயர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ஆசிரியத்துவத்தை பலாத்காரம் செய்யும் அறிக்கைக் கலாசாரம் காண்மின்களோ!

'சிரித்திரன்' என்ற சஞ்சிகையை வெளியிட்ட சிவஞானசுந்தரம் அவர்கள் 'மகுடி' என்ற கேள்வி–பதில் பகுதி மூலம் பலரையும் கவர்ந்தவர்.

ஒருமுறை வாசகர் ஒருவர் அந்தக்காலத்துக் கல்விக்கும் இந்தக் காலத்துக் கல்விக்கும் உள்ள வித்தியாசம் என்ன என்று ஒரு கேள்வியைக் கேட்டிருந்தார்.

இதற்குப் பதிலளித்த சிவஞானசுந்தரம், அந்தக் காலத்தில் ஆசிரியர் இருந்து படிப்பித்தார். மாணவர்கள் நின்று படித்தார்கள்.

இந்தக் காலத்தில் ஆசிரியர் நின்று படிப்பிக்கின்றார். மாணவர்கள் இருந்து படிக்கின்றார்கள். இதுதான் வித்தியாசம் என்று மிக நுட்பமாகப் பதில் அளித்திருந்தார்.

இப்போது நிலைமை இன்னும் மோசமாகி விட்டது.

ஆசிரியர்கள் படிப்பித்தல் என்பதை விட எல்லாவற்றுக்கும் அறிக்கை எழுதுவதிலேயே காலம் கடத்துகின்றனர்.

டெங்கு ஒழிப்பு முதல் வங்கியில் மாணவரின் சேமிப்பு வரை எல்லாவற்றையும் அறிக்கைப் படுத்துங்கள், ஆவணப்படுத்துங்கள், காட்சிப் படுத்துங்கள் என்ற மேலிடத்துக் கட்டளையால் படிப்பித்தலைத் தவிர மற்றவை எல்லாம் ஒழுங்காக நடைபெறுகின்ற அளவில் நிலைமை வந்துவிட்டது.

உண்மையில் ஆசிரியர் என்பவரின் முதற் கடமை கற்பித்தல். மாணவனுக்கு; பாடத்தை, சமூகத்தை, சமயத்தைப் போதிக்கின்றபோது அவன் தன்பற்றியும் தான் சார்ந்த சூழல் பற்றியும் சிந்திக்கத் தலைப்படுவான்.

இஃது அவனைச் சிந்திக்கத் தூண்டும். முன்பெல்லாம் ஆசிரியர்கள் படிப்பித்தார்கள். எழுத்து, இலக்கணம், இலக்கியம், கணிதம் இவற்றை மிகச் சிறப்பாக எடுத்துரைத்தனர். ஆனால் இன்று அப்படியெதுவும் நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை.

இதுதொடர்பில் ஆசிரியர்களையும் குறை காண முடியாது. மாணவனுக்குப் போதிக்க வேண்டும். அந்தப் போதனையால் மாணவன் தேர்ச்சி பெறவேண்டும். இதனை அளவிட வேண்டும் என்ற நினைப்பில் அத்தியாவசிய கற்றல் தேர்ச்சி அறிமுகப்படுத்தப்பட்டது.

மாணவனுக்கு எழுதவும் வாசிக்கவும் தெரியவில்லை. ஆனால் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிப் படிவங்கள் கமகமக்கின்றன.

வருகின்றவர்களால் அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிப் படிவங்கள் பார்வையிடப்படுகின்றன.

மேலுறை அதற்கு மேல் பொலித்தீன் உறை கூடவே வர்ண எழுத்துக்கள். இவற்றைப் பார்த்தவுடன் பிரமாதம் என்கின்றனர்.


ஆக, அறிக்கைகள் சிறப்பாக இருக்க, பாராட்டுக்களும் குவிகின்றன. ஆனால் பாவம் மாணவர். தன்னுடைய பெயரை எழுதுவதிலேயே இடர்படும் பரிதாபம்.

ஆசிரியர்கள் மீது அதிகாரிகள் கொண்ட சந்தேகம்; அதனால் அறிக்கை எழுதும் கலாசாரம்; இதனால் எங்கள் மாணவர்கள் கலாசாரத்தைத் தொலைத்தனர்.

ஆசிரியர்களை எழுதுவினைஞர்களாக்கினால் படிப்பித்தல் நடவாது. கோவைகள்தான் குவிந்து கொள்ளும். அலுமாரிகளும் நிறைந்து கொள்ளும். மாணவர்கள் மட்டும் வெறுமையாய்...

# தமிழக பேராசிரியர்கள் இலங்கை செல்லக் கூடாது

## வைகோ அறிவுறுத்து



(சென்னை)

கொழும்பில் நடைபெறவுள்ள கருத்தரங்கில் தமிழக கல்லூரி ஆசிரியர்கள் பங்கேற்க கூடாது என்று ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் எதிர்வரும் மாதம் 14,15 திகதிகளில் இலங்கைத் தலைநகர் கொழும்பில் இன்டிடியூட் ஆப் ஹியூமன் டெவலப்மென்ட் அன்ட் டிரெய்னிங் ஸ்ரீலங்கா என்ற நிறுவனத்தின் சார்பில் மனிதவள கருத்தரங்கு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

அதே போல கொழும்பு பல்கலைக் கழகம் எதிர்வரும் 19,20,21 திகதிகளில் கொழும்பில் ஒரு கருத்தரங்கை நடத்துகின்றது.

இதில் பங்கேற்க இலட்சக்கணக்கான தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டது குறித்து எவ்வித கவலையும் கொள்ளாது இந்தியாவின் பல பல்கலைக்கழகங்களில் இருந்தும் விரிவுரையாளர்கள் செல்கிறார்கள்.

அதேபோல தமிழ்நாட்டின் சில பல்கலைக்கழகங்களில் இருந்தும் விரிவுரையாளர்கள் கலந்து கொள்ள ஆயத்தமாகி வருகின்றார்கள். கருத்தரங்கம் நடத்தும் அமைப்பினர் அவர்கள் பெயர்களை வெளியிட்டு இருக்கின்றனர்.

இலங்கை மீது இந்தியா பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி உள்ள நிலையில் தமிழக பல்கலைக்கழகங்களிலிருந்தும் அரச கல்லூரிகளிலிருந்தும் விரிவுரையாளர்கள் இலங்கையில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வது கோடிக்கணக்கான தமிழர்களின் உணர்வுகளை புண்படுத்துவதாக உள்ளது.

இலட்சக்கணக்கான தமிழ் மக்களை கொன்று குவித்த கொலைகார இலங்கை அரசுக்கு ஆதரவு தெரிவித்தது போலவும் ஆகிறது.எனவே தமிழகத்துப் போராசிரியர்கள் இலங்கை செல்வதை தவிர்த்திடுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தமிழக அரசும்தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்கள் கல்லூரிகளில் இருந்தும் அரச நிறுவனங்களில் இருந்தும் யாரையும் இலங்கை செல்ல அனுமதி அளிக்கக் கூடாது என்று ம.தி.மு.க. சார்பில் வலியுறுத்துகின்றேன் என்று வைகோ கூறியுள்ளார் (அ–2)

## வவுனியா பிரதேச கீதம், இலச்சினை தயாரிப்பதற்கு விண்ணப்பம் கோரல்

(வவுனியா)

வவுனியா பிரதேச செயலாளர் பிரிவிற்கான பிரதேச கீதம் மற்றும் பிரதேச இலச்சினை என்பவற்றினை தயாரிப்பதற்கு பொருத்தமானவர்களிடமிருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளதாக வவுனியா பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

வவுனியா பிரதேசத்தின் வரலாறு, வாழ்வியல், பொருளாதாரம் மற்றும் கலை பண்பாட்டு விழுமியங்களை பிரதிபலிக்கும் வகையில் பிரதேச கீதம் மற்றும் பிரதேச இலச்சினை என்பன அமைதல் வேண்டும். ஒருவர் போட்டியின் நிமித்தம் எத்தனை ஆக்கங்களையும் சமர்ப்பிக்க முடியும்.

பிரதேச கீதம் மற்றும் பிரதேச இலச்சினை என்பன தொடர்பாக இறுதி முடிபு எடுப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் சகல ஆக்கங்கள் குறித்தும் குழுவின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு சிறந்த ஆக்கம் தெரிவு செய்யப்படும்.விண்ணப்பதாரிகள் தமது ஆக்கங்களை இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், வுவுனியா என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைப்பதுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பிரதேச கீதம் மற்றும் பிரதேச இலட்சினை தயாரித்தல் எனத் தவறாது குறிப்பிடுதல் வேண் டும் எனவும் பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார். (அ–2)

## குழாயிலிருந்து கசியும் எண்ணெய் 20 லீற்றர் ரூ.600 வீதம் விற்பனை



கொழும்பு புளுமெண்டல் பகுதியினூடாக செல்லும் எண்ணெய்க் குழாய் ஒன்றில் ஏற்பட்டுள்ள கசிவினால், கிராண்ட்பாஸ் ஜெயந்த மல்லிமாராட்சி வீதியையொட்டி காணப்படும் கால்வாய் வழியாக மசகு எண்ணெய் வெளியேறுகிறது.

கடந்த இரண்டு தினங்களுக்கு மேலாக குழாயிலிருந்து எண்ணெய் கசிவதால் கால்வாயின் மேற்பரப்பில் 4 அங்குலத்திற்கு மசகு எண்ணெய் தேங்கிநிற்பதுடன் கால்வாய் மஞ்சள் நிறத்தில் காட்சியளிக்கிறது.

இதனால் அப்பகுதி மக்கள் குறித்த கால்வாய் வழியாக வெளியேறும் மசகு எண்ணெயை மரப்பலகையால் அணையிட்டு, தேக்கிவைத்து, அதனை சட்டவிரோதமாக சேரித்து வருகின்றனர்.

குறித்த எண்ணெய்க்கு அதிக கேள்வி இருப்பதனால் இந்த எண்ணெயை 20 லீட்பர் 600 ரூபாய் என்ற விலையில் சில தரகர்கள் வாங்க வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் பெற்றோலிய வளத் துறை அமைச்சர் சுசில் பிறேமஜெயந்த தெரிவித்துள்ளதாவது,

குறித்த எண்ணெய்க் குழாய் அரசாங்கத்தினது அல்ல. தனியாருக்குரியது. அத்துடன் அதில் வெளியேறுவது எண்ணெய்க் கழிவுகளே என கருத்துத் தெரிவித்திருந்தார். (பா)

## சத்திய தரிசனம்



### ஆனந்தம் இன்று ஆரம்பம்

அறிவுக்கதவை திறப்பதுடன், அறியாமை என்ற திரையையும் கிழித்து எறிந்தால் தான் கடவுளை காண முடியும்.

இதயம் உட்பட அனைத்து இடங்களிலும் கடவுள் இருக்கிறார்,அவரை அங்கே கண்டுகொள்.உனக்கு மிக நெருக்கமானவர்,அனுக்கிரகமானவர் என்றும் அறிந்து கொள்.

நாவில் சர்க்கரை இருக்கும் வரை இனிப்பு இருக்கும். இதயத்தில் அன்பு, அமைதி,பக்தி இருக்குமானால் ஆனந்தம் இன்று தொடங்கி வாழ்நாள் வரை தொடரும்.

ஒவ்வொரு அணுவிலும் இறைவன் இருக்கிறான். அவனைவிட்டு மனிதனால் உயிர் வாழ முடியாது. உலகமே இறைவனைக் காண விழைகிறது.

கருணையால் நிரம்பிய இதயத்திற்கும்,உண்மையை பூஜிக்கும் சொல்லை கொண்டவருக்கும்,பிறருக்கு உதவி செய்பவருக்கும் இவ்வுலகிலுள்ள எந்த தீய ஆற்றலாலும் தீமை செய்ய முடியாது.

# ஆப்கான்.குறித்த ஜேர்மன் மாநாட்டில் பாகிஸ்தான் கலந்து கொள்ளாது

## நேட்டோ படை தாக்குதலின் எதிரொலி

(இஸ்லாமாபாது)

பாகிஸ்தான் எல்லைச்சாவடி மீது நேட்டோ படைகள் நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாக எதிர்வரும் 5 ஆம் திகதி ஜேர்மனியின் பான் நகரில் நடக்க உள்ள ஆப்கானிஸ்தான் எதிர்காலம் குறித்த மாநாட்டில் கலந்துகொள்ள முடியாது என பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

கடந்த 26 ஆம் திகதி பாக்., ஆப்கான் எல்லையில் உள்ள சலாலா எல்லைச்சாவடி மீது நேட்டோ படைகள் நடத்திய தாக்குதலில் 24 பாக். இராணுவ வீரர்கள் பலியாகினர். இச்சம்பவம் அமெரிக்கா, பாக். உறவில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் நேட்டோ தாக்குதல் குறித்து அமெரிக்க மத்திய படையின் விமானப்பிரிவு தலைவர் ஸ்டீபன் கிளார்க் தலைமையில் விசாரணை நடத்தப்படும் என அமெரிக்கா நேற்று அறிவித்தது. அத்தோடு இந்த விசாரணையில் பங்கேற்கும்படி பாக். மற்றும் ஆப்கானுக்கு அழைப்பும் விடுத்தது.

தொடர்ந்து அமெரிக்க வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மார்க்டோனர் நேற்று விடுத்த அறிக்கையில், ஜேர்மனியின் பான் நகரில் ஆப்கான் குறித்து நடக்க உள்ள சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்வது குறித்து பாக். ஆலோசிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இதையடுத்து நேற்று முன்தினம் நேட்டோ தாக்குதல் மற்றும் மெமோகேட் விவகாரம் குறித்து பாக். பாதுகாப்புக்கான அமைச்சரவைக்குழு கூடி விவாதித்தது. இதில் மேற்படி மாநாட்டில் பாகிஸ்தான் கலந்து கொள்ளப் போவதில்லை என முடிவெடுக்கப்பட்டது.

பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள ஷாம்சி விமானத்தளத்தை அமெரிக்கா 15 நாட்களுக்குள் காலி செய்ய வேண்டும் என பாக். கூறியிருந்தது. இந்த விமானத்தளத்தை நிர்வகித்து வரும் ஐக்கிய அரபு நாடுகளின் வெளியுறவு அமைச்சர் ஷேக் அப்துல்லா பின் ஜாயேத் இந்த கால அவகாசத்தை நீடிக்க வேண்டும் என பாக். ஜனாதிபதி சர்தாரியிடம் நேரில் கோரியிருந்தார். ஆனால், சர்தாரி அதற்கு மறுத்துவிட்டார்.

இந்நிலையில் பென்டகன் ஊடகத் தொடர்பாளர் ஜார்ச் லிட்டில் நேற்று அளித்த பேட்டியில், நேட்டோவுக்கான பொருட்கள் விநியோகத்தை பாகிஸ்தான் நிறுத்தி வைத்துள்ள போதிலும் ஆப்கானில் தலிபான்களுக்கு எதிரான அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகள் குறையாது. அவை தொடரவே செய்யும் என்றார்.

ஹக்கானி பயங்கரவாதக்குழுவுக்கு ஐ.எஸ்.ஐ. தொடர்ந்து ஆதரவளிக்கிறது. பாகிஸ்தானில் உள்ள இரு தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் வெடிபொருட்கள் ஹக்கானி குழுவுக்கு அளிக்கப்படுகின்றன.


இதேவேளை, பாகிஸ்தான் இராணுவத்தின் மீது நேட்டோ படைகள் நடத்திய தாக்குதல் குறித்து ஐ.நா. பொது செயலாளர் பான் கீ மூனுக்கு பாக். சார்பில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் குறித்து விரைவில் கவனத்தில் கொள்ள வேண்டும். இது அவசரமான ஒன்றாகும் என குறிப்பிட்டிருந்தார். அக்கடிதத்துடன் பாக். பிரதமர் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவை வெளியிட்ட அறிக்கையையும் அனுப்பி வைத்துள்ளார். இதே கடிதம் ஒன்றை ஐ.நா. பாதுகாப்புக்குழுவுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

இந்நிலையில் ஐ.நா. பாதுகாப்புச்சபையின் தற்போதைய தலைவராக உள்ள போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த ஜோஸ் பிலிப்பிமோரஸ் கேப்ரல் பாக். கடிதத்தை அனைத்து நாடுகளின் பிரதிநிதிகளின் பார்வைக்கு அனுப்பி வைத்துள்ளார். இந்நிலையில் நேட்டோ படையின் தாக்குதல் குறித்து விசாரணை நடத்த அமெரிக்காவின் விமான படை பிரிவைச் சேர்ந்த ஸ்டீபன் கிளார்க் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (அ-2)

# உலக சிந்தனையாளர் பட்டியலில் ஐந்து இந்தியர்கள் உள்ளடக்கம்

(வோஷிங்டன்)



அமெரிக்காவில் இருந்து வெளிவரும் பாரின் பாலிசி பத்திரிகை இந்தாண்டுக்கான 100 உலக சிந்தனையாளர்கள் பட்டியலில் அன்னா ஹசாரே உள்ளிட்ட ஐந்து இந்தியர்களை குறிப்பிட்டுள்ளது.

கடந்த 1970 இல் நிறுவப்பட்ட பாரின் பாலிசி பத்திரிகை ஆண்டுதோறும் உலகின் முக்கிய சம்பவங்களை பட்டியலிட்டு வெளியிடுகிறது. இந்தாண்டுக்கான முக்கிய நிகழ்வுகளையும் உலக சிந்தனையாளர்களையும் தரவரிசைப்பட்டியல் இட்டு வெளியிட்டுள்ளது.

முக்கிய உலக விவகாரங்களில் மக்களின் கவனங்களிலிருந்து விடுபட்டவையாக இந்திய இராணுவத்தின் நவீனமயம், யூரோ மண்டலப் பொருளாதார விவகாரம், மெக்சிகோ போதை மருந்துக்கடத்தல், போலிப் பொருட்களின் பரவல் ஆகியவற்றை அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

உலக சிந்தனையாளர்கள் 100 பேர் பட்டியலில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா 11 ஆவது இடத்தையும் அன்னாஹசாரே 37 ஆவது இடத்தையும் விபரோ நிறுவன தலைவர் அசீம் பிரேம்ஜி 14 ஆவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

இப்படியலில் எழுத்தாளர் அருந்ததி ராய், பொருளாதார நிபுணர் அரவிந்த் சுப்ரமணியன், ஆய்வாளர் தீபா நாராயண் ஆகிய இந்தியர்களும் இடம்பெற்றுள்ளனர். (அ-2)




# பக்தாக் நகரில் பாராளுமன்றம் அருகில் அடுத்தடுத்து இரண்டு குண்டு வெடிப்புக்கள்

(பக்தாத்)

ஈராக் நாட்டில் தீவிரவாதிகள் நாள்தோறும் குண்டுகளை வெடித்து தாக்ய்தல் நடத்தி வருகிறார்கள். இந்நிலையில் தலைநகர் பக்தாத் சுற்றியுள்ள பகுதிகளில் கார்களில் வந்து தற்கொலைப்படை தீவிரவாதிகள் பல இடங்களில் குண்டுகளை வெடித்து திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் மொத்தம் 17 பேர் கொல்லப்பட்டனர். 50 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

இதில் ஒரு தாக்குதல் சம்பவம் பக்தாத்தில் இருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் தாஜீ என்ற சிறைச்சாலை அருகில் இடம் பெற்றது. அங்கு கைதிகளை சந்திப்பதற்காக உறவினர்கள் காத்திருந்தனர். அப்போது காரில் இருந்த குண்டுகள் வெடித்தன. அங்கு ஒரே இடத்தில் 13 பேர் பலியானார்கள். மேலும் 26 பேர் காயம் அடைந்தனர்.

இந்த தாக்குதல் நடந்த சிறிது நேரத்தில் பக்தாத் நகரில் பாராளுமன்ற கட்டடம் அருகில் 2 இடங்களில் அடுத்தடுத்து கார் குண்டுகள் வெடித்தன. இதில் 4 பேர் உயிரிழந்தனர். அலி அல்-ஷிலா என்ற பாராளுமன்ற உறுப்பினர் அதிஷ்டவசமாக உயிர் தப்பினார். அவருடன் சென்ற நண்பர் பலியாகி விட்டார். மேலும் 14 பேர் காயம் அடைந்தார்கள். பாராளுமன்றம் அருகிலேயே நடந்த இந்த குண்டு வெடிப்பு சம்பவத்துக்கு சபாநாயகர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.(அ-2)

# சலவை இயந்திரத்தினுள் போட்டு 3 வயது மகனை கொன்ற தந்தை

(பரிஸ்)


பிரான்ஸ் தலைநகர் பரிஸ் அருகேயுள்ள பியாஸ் என்ற நகரை சேர்ந்தவர் கிறிஸ்டோபி சேம்பியனாஸ் (வயது 35). இவரது மனைவி சார்லின் (வயது 25). இவர்களுக்கு பாஸ்டின் என்ற 3 வயது மகன் இருந்தான். இவன் அங்குள்ள ஒரு முன்பள்ளியில் படித்து வந்தான். படு சுட்டியான இவன் தன்னுடன் படிக்கும் சக மாணவனின் ஓவியத்தை வீணடித்ததாக கூறப்படுகிறது.

எனவே பாடசாலை நிர்வாகம் கிறிஸ்டோபியை அழைத்து கண்டித்தது. இதனால் ஆத்திரம் அடைந்த அவர் தனது மகன் பாஸ்டியனின் கை, கால்களை கட்டி சலவை செய்யும் இயந்திரத்தினுள் போட்டுவிட்டு பின் ஆளியை முடுக்கி வீட்டு துணி சலவை செய்வது போன்று அவனை துவைத்து எடுத்தார்.

இதனால் அவன் தலை மற்றும் கை, கால்களில் அடிபட்டது. இதை சிறிது நேரம் வேடிக்கை பார்த்து கொண்டிருந்த அவரது மனைவி சார்லின் இதுகுறித்து அக்கம் பக்கத்தினரிடம் தெரிவித்தார். அவர்கள் வந்து கிறிஸ்டோபியை தடுத்து நிறுத்தி சிறுவன் பாஸ்டியனை சலவை இயந்திரத்தில் இருந்து மீட்டனர். படுகாயங்களுடன் இருந்த அவனை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். ஆனால் அவன் ஏற்கனவே இறந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து பொலிஸார் வழக்கு பதிவு செய்து கொடூர மனம் கொண்ட கிறிஸ்டோபியை கைது செய்தனர். இச்சம்பவத்தை தடுக்காமல் வேடிக்கை பார்த்த அவரது மனைவி சார்லினும் கைதானார்.

கிறிஸ்டோபிக்கு பாஸ்டினை பிடிக்காது. பிறந்ததில் இருந்தே அவன் மீது வெறுப்பை காட்டி வந்த அவர் கொடூரமான முறையில் கொன்று விட்டார் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)



ஜப்பான் வந்திருந்த தாய்லாந்து வர்த்தக அமைச்சர் கிட்ரியாட் நாரங்கோன் (இடது) அந்நாட்டு பிரதமர் யாஸிஹிகோ நௌடாவை டோக்கியோ நகரில் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# பொருளாதார சீர்திருத்தத்தை எதிர்த்து வேலை நிறுத்த போராட்டம்

## பிரிட்டனில் 30 இலட்சம் பேர் கூடினர்

(லண்டன்)

பிரிட்டனில் அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு பொருளாதாரச் சீர்திருத்தங்களை எதிர்த்து 30 இலட்சம் பொதுத்துறை ஊழியர்கள் கலந்து கொள்ள உள்ள பிரமாண்டமான பொதுவேலை நிறுத்தம் நேற்று நடைபெற்றது.

இதையடுத்து இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் பிரிட்டனுக்கான விமானச் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தலைமையிலான ஆளும் கூட்டணி அரசு அந்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் விதத்தில் ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு வருவாய்களில் சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. அதன்படி ஓய்வூதியத்திற்கான பொதுத்துறை ஊழியர்கள் அதிகளவில் தங்கள் பங்கைச் செலுத்த வேண்டும். கூடுதல் நேரம் உழைக்க வேண்டும். ஆனால் இதற்கு ஊழியர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியது.

இதையடுத்து நாட்டின் 20 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நேற்று பொது வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தன. இந்த வேலை நிறுத்தத்தால் பாடசாலை, கல்லூரிகள், வீதி, ரயில், விமானப் போக்குவரத்துக்கள் உள்ளிட்ட அன்றாட வாழ்வின் அத்தியாவசியச் சேவைகள் அனைத்தும் பாதிக்கப்பட்டன.

1926 இல் நடந்த வேலை நிறுத்தத்தில் 30 இலட்சம் ஊழியர்கள் கலந்து கொண்டனர். அதையடுத்து இந்த வேலை நிறுத்தம்தான் மிகப் பெரிய அளவில் இருக்கும் எனக் கருதப்படுகின்றது.

வேலை நிறுத்தத்தில் விமானப் போக்குவரத்து ஊழியர்கள், எல்லைப் பாதுகாப்பு ஊழியர்கள் கலந்து கொள்வதாக அறிவித்துள்ளனர்.

இதையடுத்து விமான போக்குவரத்து சேவையில் அதிக காலத்தாமதம் ஏற்படும் என்பதால் இந்தியா உள்ளிட்ட பிற நாடுகளின் லண்டனுக்கான விமானச் சேவைகள் இரத் துச் செய்யப்பட்டுள்ளன.(அ-2)

# இலங்கையில் பொருளாதாரம் மக்களை ஒன்றிணைக்கிறது

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



இலங்கையில் அரசியல் மக்களை பிரித்து வைக்கிறது. பொருளாதாரம் மக்களை ஒன்றினைக்கின்றது. எமது நாட்டின் தேசிய இனப்பிரச்சினை என்பது பொருளாதார ஏற்றத்தாழ்வுகளில் இருந்தே தொடக்கி வைக்கப்பட்டது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று சமர்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட அறிக்கை தொடர்பாக அவர் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாற்றத்தை விரும்பும் தமிழ் பேசும் மக்களும் தமது உயரிய வாழ்வின் இலட்சியங்களை நோக்கி, அதற்கான பாதையில் அடியெடுத்து வைக்க ஆரம்பித்து விட்டார்கள். மாற்றங்கள் கடந்த காலங்களை விடவும் பல முன்னேற்றங்களை அடைந்து வருகின்றது.

1956 ஆம் ஆண்டில் இந்த நாட்டில் தனிச் சிங்கள சட்டம் கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் இந்த நாட்டில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்கள் இரண்டாம் தர பிரஜைகளாக ஆக்கப்பட்டனர்.

ஆனாலும், இவைகள் குறித்தும் பேசுகின்ற தார்மீக உரிமையை சுயலாப தமிழ் அரசியல்தலைமைகள் அன்றே இழந்து விட்டன.

தமிழ்த் தேசியம் என்பது வெறுமனே தமிழ் இன உணர்ச்சிகளை மட்டும் ஊட்டி விட்டு மக்களை வீதிக்கு இழுத்து விட்டு நீங்கள் மட்டும் நாட்டை விட்டே ஓடிப்போய் ஒளிந்து கொள்வது கோழைத்தனம். கடந்த கால யுத்தத்தின் மூலம் அழிந்து சிதைந்துபோன எமது மக்களின் வரலாற்று வாழ்விடங்களை தூக்கி நிறுத்த வேண்டும்.

வட மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சி வீதம் 23 சதவீத வளர்ச்சியினைப் பதிவு செய்திருப்பதுடன் இது தேசிய பொருளாதார வளர்ச்சி வீதமான 8 சதவீதத்தினை விட உயர்வாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

நாடு தழுவிய ரீதியில் மொத்த தேசத்தையே பொருளாதார ரீதியில் தூக்கி நிறுத்தும் உயரிய திட்டங்களை இந்த வரவு செலவுத் திட்டம் கொண்டிருக்கிறது.

இந்த வரவு செலவுத் திட்டத்தை சகலரும் ஏற்றுக் கொள்வதன் மூலம் அழிந்து போன, தமிழ் பேசும் மக்களின் வாழ்விடங்களை நோக்கி எமது பொருளாதார அபிவிருத்திகளை நகர்த்திச் செல்ல முடியும் என அமைச்சர் குறிப்பிட்டார். (பா-11)

# மீள்குடியேறும் மக்களுக்கு வீட்டுத் திட்டம் அவசியம்

## பிரித்தானிய பிரதித் தூதுவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மீள் குடியேற்றப்படும் மக்களுக்கு புதிதாக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஐரோப்பிய ஒன்றியத்திடம் முன் வைப்பேன் என பிரித்தானியாவின் இலங்கைக்கான பிரதி உயர் ஸ்தானிகர் றொப்பிலி புலோக் தெரிவித்துள்ளார்.

யாழ். அரச அதிபரை நேற்று மாலை 4.30 மணியளவில் யாழ்.மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்; யுத்தத்திற்குப் பின்னரான காலப் பகுதியில் யாழ்.குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீள் குடியேற்றப்பட்டு வருகின்றனர்.

இருப்பினும் அந்த மக்களுக்கான அடிப்படை வசதிகள் கூட செய்து கொடுக்கப் படாத நிலையிலேயே மீள்குடியேற்றப்படுகின்றனர் என யாழ்.அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இதனால் யாழ்.குடாநாட்டில் மீள்குடியமரும் மக்களுக்கு புதிதாக வீடுகளை அமைத்துக் கொடுக்கவேண்டும் என ஐரோப்பிய ஒன்றித்திற்கு சிபார்சு வழங்குவேன் என அவர் உறுதிபடத் தெரிவித்தார்.

இதேவேளை பெண்களுக்கு எதிரான வன்முறை அதிகரித்துள்ளதாகவும் தற்கொலை செய்வோரின் வீதம் அதிகரித்துள்ளதாகவும் தகவல் கிடைத்தது.

இதுதொடர்பாக அரச அதிபரிடம் கேட்ட போது;

பெண்களுக்கு எதிரான வன்முறை கடந்த காலங்களிலும் இடம்பெற்றுள்ளது.

ஆனால் அவை வெளியில் கொண்டு வரப்படவில்லை.

இப்போதே அவை வெளியில் கொண்டு வரப்படுகின்றது.

இதுதவிர தற்கொலை செய்வோரின் வீதம் அதிகரிப்பதற்கு பல காரணங்கள் உண்டு.

யுத்தம் காரணமாக யாழ்.குடாநாட்டில் 29 ஆயிரம் விதவைகள் உள்ளனர்.

இதுதவிர மனநிலை பாதிப்படைந்த நிலையிலும் உடல் ஊனமுற்ற நிலையிலும் தொழில் வாய்ப்பின்றியும் பலர் அல்லல் படுகின்றனர்.

இதனால் தற்கொலை செய்வோரின் வீதம் அதிகரித்துள்ளது என அரச அதிபர் கூறினார்.

மேலும் இந்திய வீட்டுத்திட்டம் தாமதமாவதற்கான காரணிகளைக் கேட்டறிந்துள்ளோம். எனவே இங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாக பிரித்தானிய அரசாங்கத்திடம் விரிவாக எடுத்துக் கூறப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்(பா-6)

# ஆறு கல்வி வலயங்...

பிரதிக் கல்விப்பணிப்பாளர் கே. நந்தகுமார் பதவியுயர்வு பெற்றுள்ளார்.

அத்துடன் கிளிநொச்சி பதில் வலயக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றிய எஸ்.முருகவேலுக்கு வலயக்கல்விப் பணிப்பாளராக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். வரதராஜமூர்த்தி முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றிய எஸ். கிருஷ்ணகுமார், வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிச் செயலாளர் ஏ.எம்.சியான், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் மன்னார் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ். மாலினி மடு வலயக் கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றுள்ளார்.

இவ்வாறு நியமனம் வழங்கப்பட்டுள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இன்று தமது கடமைகளைப் பொறுப்பேற்பர் என வடக்கு மாகாண கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.(பா)

# தர்சினி தலைமையில் சிங்கப்பூர் செல்லும் இலங்கை வலைபந்தாட்ட அணி




சிங்கப்பூரில் நடைபெறவுள்ள 6 நாடுகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிக்காக பல புதுமுகங்களைக் கொண்ட இலங்கை குழாம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

டிசம்பர் 5 முதல் 11 ஆம் திகதி வரை இச் சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது. இலங்கை, பிஜி, நமீபியா, பப்புவா நியூகினியா, மலேஷியா, சிங்கப்பூர் ஆகிய அணிகள் இப்போட்டிகளில் பங்கு பற்றவுள்ளன.

ஆசியாவின் மிகச்சிறந்த வலைப்பந்தாட்ட கோல்புகுத்துநரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வீராங்கனையான தர்ஷினி சிவலிங்கம் (உயரம் 6 அடி 9 அங்குலம்) இம்முறை இலங்கை அணிக்கு தலைமை தாங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

திருகோணமலையைச் சேர்ந்த அஸ்வினி பாக்கியராஜா என்னும் மற்றொரு தமிழ் வீராங்கனையும் இக்குழாமில் இடம்பெற்றுள்ளார்.

இலங்கை அணியின் பயிற்றுநராக ஹைசிந்த் ஜயசிங்க விளங்குகிறார். உதவி பயிற்றுநராகவும் முகாமையாளராகவும் தீப்தி அல்விஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

வீராங்கனைகள் விபரம் : தர்ஷினி சிவலிங்கம் (தலைவி), சேமினி அல்விஸ், சுரேகா குமாரி, விஷாகா ஜயசூரிய, விராஜி சமரிக்கா, தீபிகா அபயகோன், ஷாலிகா இராங்கனி, அஸ்வினி பாக்கியராஜா, விஸ்னா பெர்னாண்டோ, கயானி திசாநாயக்க, ஜனனி பெரேரா, ஹசித மெண்டிஸ்.

# குடும்ப பெண் உயிரிழப்பு

கிணற்றடியில் வழுக்கி விழுந்த குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 9.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடியைச் சேர்ந்த நிமல்ராஜ் தமயந்தி (வயது 30) என்ற பெண்ணே உயிரிழந்தவர் ஆவார். (பா-11)

# அனைத்து...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைதிகளின் விவகாரம் தொடர்பாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சரான சந்திரசிறி கஜதீரவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இந்தக் கைதிகளின் பாதுகாப்புக் கருதி அவர்களை வவுனியா சிறைச்சாலைக்கு மாற்றுமாறு அமைச்சரிடம் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது. (பா-9)

# வங்களா...

வட மத்திய மாகாணங்களில் பாரியளவு மழை தொடர்ச்சியாக பெய்யும் எனவும் பிற்பகல் அல்லது இரவு வேளைகளில் நாட்டின் ஏனையபிரதேசங்களிலும் இடியுடன் கூடிய மழை காணப்படும் என்று கூறப்படுகின்றது. (பா-9)

# ஆணைக்குழுவின் ...

இலங்கைக்கான நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பவுள்ள நிலையில் யசூசி அகாஷி, நேற்று கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்தார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையானது தேவை கருதி மக்கள் மத்தியில் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என ஜப்பானிய அரசு எதிர்பார்க்கின்றது. அத்துடன் குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவுகளை இலங்கை அரசு அமுல்படுத்த வேண்டும்.

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கும் இடையே நடைபெறும் பேச்சுவார்த்தையில் ஓர் முடிபு ஏற்படும் என ஜப்பான் நம்புகின்றது. இதன் மூலம் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக நியமிக்கப்படவுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொள்ளும் என எதிர்பார்க்கின்றோம்.

வடக்கில் மேற்கொள்ளப்படும் இராணுவமயமாக்கம், இதனால் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்பு தொடர்பில் நேற்று முன் தினம் என்னைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் அகாஷி குறிப்பிடும் போது,

வாய்ப்பாடு ரீதியான தீர்வுகள் ஏற்புடையன அல்ல. வேற்று நாடுகளில் இருந்து இரவலாக பெறப்பட்ட மாதிரிகளை திணிக்க முடியாது என்றார்.

அவசரகால சட்டமூலம் நீக்கப்பட்டமை மற்றும் மனிதவுரிமைகளை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான தேசிய செயற்திட்டத்தையும் அகாஷி பாராட்டினார். எனினும் மனித உரிமை விடயங்களில் முன்னேற்றம் காணப்பட வேண்டும். பொறுப்புக்கூறல் தொடர்பில் உள்நாட்டு செயன்முறை தேவை. எனினும் அது சர்வதேச நியமங்களுக்கு ஏற்றதாக இருத்தல் வேண்டும் என யசூசி அகாஷி மேலும் தெரிவித்தார்.

ஜப்பான் அரசு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட தெற்கு அதிவேக நெடுஞ்சாலை திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்த யசூசி அகாஷி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ், பசில் ராஜபக்ஷ, ரவூப் ஹக்கீம், பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ ஆகியோருடன் பேச்சு நடத்தினார்.

இதற்கு மேலதிகமாக ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சிவில் சமூகம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் இவர் பேச்சு நடத்தியமை குறிப்பிடத்தக்கது.(பா)

**TILKO JAFFNA CITY HOTEL**
70/6, K.K.S ROAD, JAFFNA. T.P:0212225969
Web:cityhoteljaffna.com
e-mail:info@hoteljaffna.com
Tilko Jaffna City Hotel for Business & Relaxation in the heart of Jaffna City
Conference Hall Facilities including Multimedia & PA System
Large Banquet Hall For Wedding Receptions, Work Shops, Conventions & Seminars
Non AC Mini Conference Hall
Special take away Lunch/Dinner Pack
Morning/ Evening Snacks
Special Package Rate for
Family Get-to-Gathers, Birthday/ Anniversary Functions, Company Get to Gathers
Await Opening
Special Barbaque at our Garden Cafeteria
Inclusive of Chines/Indian Jaffna Authentic
Variety Cuisine s From our open hot ranga Kitchen
உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுது போக்கு அம்சங்களுக்கு யாழ். நகரின் மத்தியில் ஒளி, ஒலி அமைப்பு மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய மாநாட்டு மண்டபம், சிறிய /நடுத்தர /பிரமாண்டமான குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத சகல வசதிகளுடன் கூடிய மண்டபங்கள், திருமண, பிறந்த நாள் கொண்டாட்டங்கள், வியாபார நிறுவன ஒன்றுகூடல்களுக்கும் ஏதுவான பாரிய மண்டப வசதி அத்துடன் மதிய, இரவு பொதி செய்யப்பட்ட உணவு வகைகள், காலை, மாலை சிற்றுண்டிகள்...
இந்தியா, சீனா மற்றும் யாழ். பாரம்பரிய உணவு வகைகளும் ஒரே இடத்தில்...
மிகவிரைவில் TILKO HOTEL இல் Barbeque வசதியுடனான பூந்தோட்ட உணவகம் திறக்கப்பட வுள்ளது.
உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு யாழ் நகரில்...
T.P.:077 6943479
K.Gunaseelan
Marketing Executive


## பாதுகாப்புச் செயலர்...

செயற்பட்டன என்பதை விரைவில் வெளிவரப் போகும் இந்த அறிக்கை அனைத்துலகசமூகத்துக்கு தெளிவுபடுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, பொதுமக்களுக்கு இழப்புகள் ஏற்படுத்தாத வகையில் போர் எவ்வாறு நடத்தப்பட்டது என்பது பற்றிய தெளிவான தகவல்களை நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை உள்ளடக்கியிருக்கும்.

போர்க்கால இராணுவத்தை அமைதிக்கால இராணுவமாக மாற்றுவது மற்றும் மனிதாபிமானப் போரின் போதான பொறுப்புக் கூறுதல், போர் எவ்வாறு நடத்தப்பட்டது போன்ற விடயங்கள் குறித்து அவர் தனது உரையில் விபரமாக எடுத்துக் கூறியுள்ளார்.

இதையடுத்து உள்நாட்டு வெளிநாட்டு, பயிற்சி அதிகாரிகள் எழுப்பிய சந்தேகங்களுக்கும் ஜெகத் ஜெயசூரிய பதிலளித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போது மீறல்கள் இடம் பெற்றதற்கான முதல் நிலைச்சான்றுகள் இருப்பதாக நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாக ஏற்கனவே தகவல்கள் வெளியிருந்தன.

அத்துடன், போரின்போது சில மீறல்கள் இடம்பெற்றிருக்கலாம் என்றும் குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்தப்பட்டால் சம்பந்தப்பட்ட படையினர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய கூறியுள்ளார்.

இந் நிலையில் இராணுவத் தளபதி போரின் போது எந்தவொரு மீறல்களும் இடம்பெறவில்லை என்று வலியுறுத்தியுள்ளதுடன், அது பற்றிய உண்மைகள் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் வெளியாகும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (பா)


**தவறிவிட்டது**

தேவராசா தேவரஞ்சன் (ஏழாலை மேற்கு, ஏழாலை) என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 791982952V), சாரதி அனுமதிப்பத்திரம் (V57788) என்பன தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு இல.:-
077 8421294
(6875)



**மின் உபகரணங்கள் திருத்துதல்**

T.V, Washing Machine, Fridge, Fan, Blender மற்றும் அனைத்து வீட்டு மின் உபகரணங்களும் உங்கள் வீட்டிற்கே வந்து திருத்திக் கொடுக்கப்படும். அத்துடன் வீட்டு வயறிங் திருத்த் வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு :- 077 8000748
(6878)


## யாழ்ப்பாண பொது நிர்...

அரச அதிபரை சந்தித்து யாழ். குடாநாட்டு நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

இந்தக் கலந்துரையாடலுக்கு பின்பு அரச அதிபர் பத்திரிகையாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்காவின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சிரேஷ்ட அதிகாரி, பிரதிநிதி கத்தரீனா டபிள்யூ பொண்டி, அமெரிக்காவின் கொழும்பு தூதரகத்தின் அதிகாரி திருமதி பத்மினி ராஜதுரை ஆகியோர் வருகை தந்தனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது போருக்குப் பின்னரான காலப்பகுதியில் யாழ். குடா நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி திட்டங்கள், மீள் குடியேற்றம், வாழ்வாதார உதவிகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆவணப் படங்கள் மூலம் அவர்களுக்கு எடுத்துரைத்தேன்.

இதன் போது யாழ். குடாநாட்டில் போருக்கு பின்னரான காலப்பகுதியில் இராணுவத்தினரின் படையணிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதா எனவும் பொது நிர்வாகத்தில் இராணுவத்தினர் ஈடுபடுகின்றனரா எனவும் அமெரிக்காவின் இலங்கைக்கான சிரேஷ்ட அதிகாரி கேள்வியெழுப்பினார்.

அதற்கு யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரை யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் பொது நிர்வாகத்தில் இராணுவத்தின் தாக்கம் எனக் கூறுவதற்கு ஒன்றும் இல்லை.

பொது நிர்வாகத்தைபொறுத்தவரைமக்களுக்குசிறப்பானசேவையை வழங்கக்கூடிய வகையிலேயே உள்ளது.

மேலும் குடாநாட்டில் இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுவருகின்றது. இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் மக்களின் நிலங்கள்விடுவிக்கப்பட்டுவருகின்றது.

மக்களுக்கான சேவைகளை வழங்குவதில்இராணுவத்தினர்முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.


பொது நிர்வாகத்தில் இராணுவத்தினரால் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படவில்லை. சிறப்பான முறையிலேயே நடைபெற்று வருகிறது என தாம் பதிலளித்ததாக அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (பா-6)


ISO 9001-2008 சர்வதேச அங்கீகாரம் பெற்ற கணினிக் கற்கைநெறிகள்........
e.com Computer Training Centre
மாபெரும் இலவசக் கருத்தரங்கு
இவ்வருடம் கல்விப் பொதுதராதரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான "தகவல் தொடர்பாடல் பாடத்துக்கான" இலவச கருத்தரங்கு நாளை 02.12.2011 (வெள்ளிக்கிழமை) நடை பெறவுள்ளது.
இடம் : யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் (பிரதான மண்டபம்)
நேரம் : காலை 9 மணி
அனைத்து பாடசாலை மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்
- நிர்வாகத்தினர்
Head Office: No.95A Temple Road, Nallur, Jaffna
Branch: K.K.S Road, Kondavil, Jaffna.
Call... 021-7429005 021-7200902
(C-5067)


# மரண அறிவித்தல்

# பூதப்பிள்ளை காசிநாதர் (காசி அண்ணை)

**(Director - K.S.N. Engineering (Pvt) Ltd, முன்னாள் ESP & Co கொள்வனவு முகாமையாளர்)**



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் 22, பிறவுண் வீதி, கலட்டிச் சந்தி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பூதப்பிள்ளை காசிநாதர் கடந்த 28.11.2011 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூதப்பிள்ளை-கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னையா, நல்லம்மாவின் மருமகனும் தவமணிதேவியின் பாசமிகு கணவரும் கயரசன் (கஜன்) (Jaffna Suntel Project), கயபாலன் (மயூரன்) (Health and Social Care in Medicine- City of London College, UK), லோகாசினி (MD and General Surgery in Medicine) (G.T. Popa Medicine and Pharmacy, Romenia) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வலட்சுமி, சிவபாக்கியம், காலஞ்சென்ற தங்கம்மா, கனகநாயகம் (இராசா) மற்றும் செல்வநாயகம், வைரவநாதன் (லண்டன்), வைத்தியநாதன், சண்முகநாதன், பரமேஸ்வரி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், துரைராசன், நவரத்தினம், தவராசன் ஆகியோரின் மைத்துனரும் மல்லிகாதேவி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 01.12.2011 வியாழக்கிழமை மேற்படி இல்லத்தில் காலை 11 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: கா.கஜன் (மகன்)

22, பிறவுண் வீதி, கலட்டிச் சந்தி,
யாழ்ப்பாணம்.
(தொழில்நுட்பக் கல்லூரி முன்பாக)

(C-5081)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.